## வேளாண்மை

### பொதுவான போக்குகள்

பெரும்பாலான பண்டங்களின் வெளியீடு வீழ்ச்சிகளைப் பதிவுசெய்ததன் விளைவாக 1989 இல் வேளாண்மைத்துறை கடுமையான பின்னடைவிற்கு உட்பட்டது. குறைவான இவ்வுற்பத்திச் செயலாற்றத்திற்கு உதவிய முக்கிய காரணிகளாக ஆண்டின் முற்பகுதியில் நிலவிய வரட்சி நிலைமைகள், இரண்டாம் காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட கடுமையான பருவக்காற்று மழை வீழ்ச்சி, உள்நாட்டுக் குழப்பங்கள் என்பன விளங்கின. உள்நாட்டுக் குழப்பங்களின் பாதகமான தாக்கம் குறிப்பாக மரப்பயிர்த்துறையில் கடுமையாகக் காணப்பட்டது. மரப்பயிர்களிடையே தேயிலையின் உற்பத்தி 9 சதவீதத்தினாலும், இறப்பரின் உற்பத்தி 10 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைய தெங்கு உற்பத்தி மட்டும் ஓரளவு முன்னேற்றத்தினைக் காட்டியது. அதேவேளை நெல் உற்பத்தி 1989 இல் 17 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுக் காலத்தில் பெரும்பாலான சிறு ஏற்றுமதிப் பயிர்களினதும் அதேபோன்று பெரும்பாலான சிறு உணவுப் பயிர்களினதும் செயலாற்றமும் ஏமாற்றம் தருவதாக இருந்தது.

### முக்கிய ஏற்றுமதிப் பயிர்கள்

#### தேயிலை

தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக அதிகரிப்புக்களைக் கொண்டிருந்த தேயிலை உற்பத்தி 1989 இல் 2,070 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு ஏறத்தாள 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1988 இன் நான்காம் காலாண்டில் தொடங்கிய உற்பத்தியின் வீழ்ச்சி 1989 இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் தொடர்ந்தும் அதே நிலையில் காணப்பட்டது. தாழ்நிலப் பிரதேச உற்பத்தியும் மத்தியநிலப் பிரதேசத்தில் குறிப்பிட்ட பகுதிகளின் உற்பத்தியும் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டன. ஆண்டின் தொடக்கப் பகுதியில் காணப்பட்ட வரட்சி நிலைமைகள் 1988 இன் இறுதி மாதங்களில் கத்தரித்தலிலிருந்து பிடுங்கல் வரையிலான நடவடிக்கைகளைத் தடங்கலுறச் செய்ததன் காரணமாக உற்பத்தியில் எதிர்பார்க்கப்பட்ட மீள் நன்னிலையைத் தாமதப்படுத்தின. 1989 இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட கடுமையான பருவக்காற்று மழையும் உற்பத்தியின் மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு இன்னொரு முக்கிய உதவு காரணி தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்களாகும். இக்குழப்ப காலத்தில் பெருந்தோட்டங்களின் வழமையான வேலைத்தன்மைகள் தடங்கலுற்றதுடன் பல தேயிலைத் தொழிற்சாலைகள் சேதமாக்கப்பட்டன அல்லது அழிக்கப்பட்டன. 1989 இல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தேயிலையின் அனைத்து மூன்று உயரவகைகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், 830 இலட்சம் கிலோக்கிறும்களுக்கு ஏறத்தாள 14 சதவீதத்தினால் உற்பத்தி வீழ்ச்சியடைந்த தாழ் நிலப் பிரதேசங்களிலேயே வீழ்ச்சி மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. எனினும், மொத்த உற்பத்தியில் தாழ்நிலத் தேயிலை உற்பத்தியே தொடந்தும் மிகப் பெரும் பங்கிற்கு (40 சதவீதம்) வகை கூறியது. 1989 இல் உயர்நிலத் தேயிலையின் வெளியீடு 4 சதவீதத்தினால் 740 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் மத்தியநிலத் தேயிலையின் வெளியீடு 500 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

# முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.10

### தேயிலைத்துறை மீதான புள்ளி விபரங்கள் 1987—1989

| விடயம் | அலகு | 1987 | 1988 (அ) | 1989 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப.இ.கி. கிறாம்கள் | 213.3 | 226.9 | 207.0 |
| 1.1 உயர் நிலம் ... | ,, | 73.4 | 76.8 | 74.1 |
| 1.2 மத்திய நிலம் ... | ,, | 53.5 | 54.3 | 50.0 |
| 1.3 தாழ் நிலம் ... | ,, | 86.4 | 95.8 | 82.9 |
| 2. தேயிலையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு | '000 எக்டேயர்கள் | 221 | 222 | 222 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொன்கள் | 136.7 | 138.0 | 124.6 |
| 4. மீளப் பயிரிடல் ... | எக்டேயர்கள் | 1,503 | 1,592 | 155.1 |
| 5. விலைகள் ... | | | | |
| 5.1 கொழும்பு தேறிய ... | ரூபா/கி. கி. | 38.06 | 41.59 | 52.16 |
| 5.2 ஏற்றுமதி க. ஏ. பெ. ... | ,, | 52.97 | 55.95 | 66.91 |
| 6. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 201.1 | 219.8 | 204.2 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. (சி.எ.உ.ப. இ) | 10,653.5 (280) | 12,298.7 (288) | 13,663.9 (296 |
| 8. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) ... | | 5.5 | 5.1 | 4.5 |

அ. திருத்தப்பட்டது.
ஆ. தற்காலிகமானவை.
இ. பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலினதும் உற்பத்திச் செலவினதும் தரவுகள் கிடைக்கவில்லை.

1989 இல் நாசகார நடவடிக்கைகளின் காரணமாக அரசதுறைக் கூட்டுத் தாபனங்கள் இரண்டிலும் 25 தேயிலைத் தொழிற்சாலைகளுக்குமேல் சேதமாக்கப்பட்டவேளையில் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் இரண்டு தொழிற்சாலைகளும் சேதமாக்கப்பட்டன. உற்பத்தி இழப்புக்களை ஆகக் குறைக்கும் ஒரு முயற்சியாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் பாதிக்கப்பட்ட பெருந்தோட்டங்களின் தேயிலை இலைகளைக் குறைந்த இயலளவுடன் தொழிற்படுகின்ற அவற்றின் ஏனையதொழிற்சாலைகளுக்கு அனுப்பின. எனினும் தேயிலைச் சிறு உடைமையாளர்களுக்கு அண்மையில் உள்ள தொழிற்சாலைகள் சேதமாக்கப்பட்டமையால் அவர்கள் தங்கள் கொழுந்தை விற்பதில் கஷ்டங்களுக்குள்ளாகினர்.

1989 இல் மரபுவழித் தேயிலையின் உற்பத்தி 2,010 இலட்சம் கிலோக் கிறாம்களாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 10 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 1989 இல் வெட்டிக் கிழித்துச் சுருட்டப்பட்ட தேயிலை போன்ற மரபுவழியற்ற தேயிலையினதும், லோவறி முறையில் பதனிடப்பட்ட தேயிலையினதும் உற்பத்தி 17 இலட்சம் கிலோக்கிறாம்களால் அல்லது 42 சதவீதத்தினால் 59 இலட்சம் கிலோக்கிறாம்களுக்குக் கணிசமானளவில் அதிகரித்தது. இது வெட்டிக் கிழித்துச் சுருட்டப்பட்ட தேயிலையில் ஏற்பட்ட கிட்டத்தட்ட 30 இலட்சம் கிலோக்கிறாம்கள் கொண்ட கணிசமான அதிகரிப்பினதும் லோவறி முறையில் பதனிடப்பட்ட தேயிலையில் ஏற்பட்ட 12 இலட்சம் கிலோக்கிறாம்கள் கொண்ட வீழ்ச்சியினதும் கூட்டு விளைவாகும்.

உற்பத்தி வீழ்ச்சி அரச பெருந்தோட்டம், தனியார்துறை இரண்டிலும் சமமற்றமுறையில் காணப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளினது தேயிலை உற்பத்தி (வாங்கப்பட்ட தேயிலைக் கொழுந்துகளின் உற்பத்தியை உள்ளடக்கி) 694 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 634 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் 1981 இலிருந்து தொடர்ச்சியான வளர்ச்சியைப் பதிவு செய்த தனியார்துறையின் தேயிலை உற்பத்தி 1989 இல் கடுமையான பாதிப்பிற்கு உட்பட்டது. தனியார்துறையின் தேயிலை உற்பத்தி, முன்னைய ஆண்டின் 13 சதவீத அதிகரிப்பிற்கு முரணாக 11 சதவீதத்தால் 740 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1989 இல் தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 13,400 மெற்றிக் தொன்களால் 124,600 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. வளமாக்கி வழங்கல்களின் வீழ்ச்சியில் ஏற்பட்ட அடிப்படைப் பண்பு யாதெனில், இது இவ்வாண்டின் முதல் மூன்று காலாண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையே யாகும். காலநிலை, பாதுகாப்பு நிலைமைகளின் முன்னேற்றத்துடன் இணைந்து தேயிலை விலைகள் அதிகரித்தமையாலும், தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1989இன் நான்காம் காலாண்டில் அதிகரித்தன. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையால் முகாமைப்படுத்தப்பட்ட தேயிலைத் தோட்டங்களின் வளமாக்கிப்பாவனை 1989இல் 8 சதவீதத்தால் 43,603 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் முகாமைப்படுத்தப்பட்ட தேயிலைத் தோட்டங்களின் வளமாக்கிப் பாவனை 17 சதவீதத்தால் 27,467 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. கிடைக்கத்தக்கதாகவுள்ள தரவுகளின்படி தனியார்துறையின் வளமாக்கிப் பாவனையும்கூட வீழ்ச்சியைப் பதிவு செய்தது. வழங்கல்/பகிர்ந்தளிப்புக்கள் பிரச்சினைகளுக்குக் காரணமாயமைந்த வரட்சி நிலைமைகளும் அமைதியற்ற நிலைமைகளும் வளமாக்கிப் பாவனையின் வீழ்ச்சி மீது முக்கிய தாக்கத்தைக் கொண்டிருந்தன.

தேயிலைத் துறையின் சராசரி விளைச்சல் மீதான தரவுகள் முழுமையாகக் கிடைக்கத்தக்கதாகவில்லை. 1989 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான தோட்டங்களின் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 1,247 கிலோக்கிறாம்களுக்கு 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான தோட்டங்களின் விளைச்சல் எக்டேயர்களுக்கு 1,102 கிலோக்கிறாம்களுக்கு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

1989 இல் தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 222,110 எக்டேயர்களாக மதிப்பிடப்பட்டதுடன் 1988 இன் நிலப்பரப்பைவிட 427 எக்டேயர்கள் கொண்ட ஒரு சிறு அதிகரிப்பைப் பதிவு செய்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினாலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினாலும் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு ஒவ்வொன்றும் 2 சதவீதத்தால் முறையே 51,599 எக்டேயர்களுக்கும், 46,585 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சி அடைந்தது. இதேவேளையில் 1989 இல் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1,551 எக்டேயர்களுக்கு 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மீளப் பயிரிடப்

பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி முழுவதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும். 1989 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 173 எக்டேயர்களினால் 632 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகள் 82 எக்டேயர்கள் அதிகரிப்பைப் பதிவு செய்து 595 எக்டேயர்களாக விளங்கின. முன்னைய ஆண்டைப் போலல்லாது 1989 இல் தனியார்துறையால் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 50 எக்டேயர் களினால் 324 எக்டேயர்களுக்கு அதிகரித்தது.

1989 இல் புதிய பயிரிடுகையின் கீழ்க் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பு 1,178 எக்டேயர்களாக விளங்கி, 1988 இன் பரப்பளவைவிட 10 சதவீதம் அல்லது 102 எக்டேயர்கள் அதிகரித்து விளங்கியது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளின் புதிய பயிரிடுகைகள் 1988 இன் 101 எக்டேயர்களிலிருந்து 1989 இல் 56 எக்டேயர்களுக்கு 45 எக்டேயர்களினால் வீழ்ச்சியடைந்திருக்கையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் புதிய பயிரிடுகைகள் 97 எக்டேயர் களிலிருந்து 111 எக்டேயர்களுக்கு அதிகரித்தன. இதேவேளையில் தனியார் துறையின் புதிய பயிரிடுகைகள் 1989 இல் 1,011 எக்டேயர்களுக்கு 133 எக்டேயர்களால் அதிகரித்தன.

பயிரிடுகை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தும் நோக்குடன், உதவுதொகை வசதிகளுக்கான வழிமுறைகளை முன்னேற்றும் பொருட்டு 1989 சனவரியில் பல வழி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. உயர்/மத்திய நிலங்களுக்கான மீள் நடுகை உதவுதொகை எக்டேயருக்கு ரூ. 48,000 இற்கு மேல்நோக்கித் திருத்தப் பட்டிருக்கையில் தாழ்நிலத்திற்கான உதவுதொகை எக்டேயருக்கு ரூ. 41,000 இற்கு அதிகரிக்கப்பட்டது. தேயிலைக்கான புதிய பயிரிடுகை உதவித்தொகையும் எக்டேயருக்கு ரூ. 30,000 இற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டதுடன் இத் திட்டத்தின் எதிர்காலம் பழைய இறப்பர் நிலங்களில் தேயிலை பதியங்களைப் பயிரிடுவதனை உள்ளடக்கும் பொருட்டு விரிவாக்கப்பட்டது. இடைவெளிகளை நிரப்புவதற்கான உதவுதொகைத் திட்டமும் திருத்தப்பட்டதுடன் இது எக் டேயருக்கு இடைவெளிகளை நிரப்புவதற்கான செடிகளின் ஆகக்கூடிய எண் ணிக்கையை 2,000 இலிருந்து 750 இற்குக் குறைத்தது.

தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபை உதவு தொகைகள், செடிகள், வளமாக்கி, விரிவாக்கப் பணிகள் என்பவற்றை வழங்கு வதன் மூலம் தனியார்துறையின் நலன்களைத் தொடர்ந்தும் பேணியது. பயிரிடும் நடவடிக்கைகளுக்காகத் தேயிலை சிறு உடைமைகள் அபிவிருத்தி மேலாண்மைச் சபையால் வழங்கப்பட்ட மொத்த உதவுதொகை 1989 இல் ரூ. 710 இலட்சத் திற்கு 59 சதவீதத்தால் அதிகரித்தது. பயிரிடுகை நடவடிக்கைகளின் கீழ்க் கொண்டுவரப்பட்ட நிலத்தின் விரிவாக்கமும், உதவுதொகையின் அதிகரித்த வீதமும் இவ்வதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்திருக்கலாம். சிறு உடைமையாளர் துறையின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகத் தேயிலை சிறு உடைமை யாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் விரிவாக்கப் பணிகளைப் பலமாக்கும் ஆர்வத்தினைப் பிரதிபலிக்கும்வகையில் 1989 இல் விரிவாக்க அலுவலர்களின் எண்ணிக்கை 80 இலிருந்து 115 இற்கு அதிகரிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்திலிருந்தான நிதி உதவியும், 1989 இல் விரிவாக்கப் பணிகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்படவிருக்கும் சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்

றிட்டம் மீதான ஆரம்ப வேலைகள் இவ்வாண்டில் நிறைவேற்றப்பட்டன. இச் செயற்றிட்டம் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாம் பகுதி நாற்றுப் பண்ணைக்கான நிதிகளை வழங்கல், தோட்ட அபிவிருத்தி, தனியாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளின் புத்தாக்கம் என்பவற்றின் மீது கூடிய கரிசனை காட்டியது. இரண்டாம் பகுதி விரிவாக்கப் பணிகளையும், விரிவாக்க ஆராய்ச்சி இணைப்புக்களையும் முன்னேற்றுவதன் மூலம் நிறுவன ரீதியான வலுப்படுத்தலுக்கு முன்னுரிமை கொடுக்கும்.

தனியார்துறை தேயிலை உற்பத்தியாளர்களுக்கு உதவி வழங்குவதற்காகப் பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கியநாடுகள் முகவர் நிலையத்திடமிருந்து வரையறுக்கப்பட்ட மேர்க்கன்டைல் கிறடிட்டினால் பெறப்பட்ட கடன்களின் கீழான பகிர்ந்தளிப்புக்கள், இவ்வாண்டில் நிலவிய குழப்பநிலைகள் காரணமாக 1989 இல் ஒரு பின்னடைவிற்குள்ளாகின. 1989 இல் ரூ. 170 இலட்சம் வரையிலான கடன்கள் ஒப்புதலளிக்கப்பட்டன.

1989 இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கான சராசரி உற்பத்திச் செலவு கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 49.70 இற்கு 13 சதவீதத்தினால் அதிகரித்தது. அதிகரித்த கூலிகள்,போக்குவரத்து, எரிபொருட்செலவு அதிகரித்தமை குழப்பமான சூழ்நிலைகளால் ஏற்பட்ட உற்பத்தி இழப்புக்கள் ஆகிய முக்கிய காரணிகள் இவ்வதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்தன. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளின் கிலோக்கிறாம் ஒன்றுக்கான சராசரி கூட்டு உற்பத்திச் செலவு கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 54.59 இற்கு 14 சதவீதத்தால் அதிகரித்தவேளையில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினது அத்தகைய செலவு கிலோக்கிறாமொன்றுக்கு ரூ. 52.29 இற்கு 20 சதவீதத்தால் அதிகரித்தது.

1988 இன் முன்னேற்றத்தைத் தொடர்ந்து 1989 இல் கொழும்பு ஏலங்களில் தேயிலை விலைகள் மேலும் பலமடைந்தன. 1989 இல் கொழும்பு ஏலங்களில் தேயிலையின் சராசரி மொத்த விலை கிலோக்கிறாமிற்கு ரூ. 54.61 இற்குக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததுடன், 1988 இன் விலைமட்டத்தைவிட 28 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. குறைந்த உலக வழங்கலும் இந்தியாவால் உள்நாட்டுச் சந்தைக்குக் கூடியளவு தேயிலை திசை திருப்பப்பட்டமையும் விலை அதிகரிப்பிற்குப் பங்களிப்புச் செய்த முக்கிய காரணிகளாக விளங்கின. அதே வேளையில் சோ.ச.கு. ஒன்றியத்திலேற்பட்ட சொந்தப் பயிர் பற்றாக்குறை காரணமாக அதன் கொள்வனவுகள் அதிகரித்தமை கொழும்பு ஏலங்களில் பலமான கேள்விக்குப் பங்களிப்புச் செய்தது. தேயிலையின் ரூபா விலையை உயர்த்திய மற்றைய முக்கிய காரணியாகச் செலாவணி வீதத்தின் தேய்வு விளங்கியது. சிறந்த விலைகளின் விளைவாக மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினது உற்பத்தியாளர் இலாபம் 1988 இன் கிலோக்கிறாமொன்றுக்கான எதிர்க்கணிய இலாபமான ரூ. 6.90 இலிருந்து 1989 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 0.57 கொண்ட நேர்க்கணிய இலாபத்திற்கு முன்னேறியவேளையில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினது உற்பத்தியாளர் இலாபமும் 1988 இன் கிலோக்கிறாம் ஒன்றிற்கான ரூ. 2.17 எதிர்க்கணிய இலாபத்திலிருந்து 1989 இல் கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 3.15 கொண்ட நேர்க்கணிய இலாபத்திற்கு முன்னேற்றமடைந்தது.

தேயிலைத்துறையின் செயலாற்றத்தை முன்னேற்றுவதற்கு 1989 இல் பல கொள்கை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேயிலைத்துறைக்கான கொள்கை உருவாக்கம் பற்றி நிபுணர்களின் மதியுரையைப் பெறும்பொருட்டு இவ்வர்த்தகத்தின் சகல துறைகளிலிருந்தும் பிரதிநிதிகளைக் கொண்ட தேயிலைச் சபை நிறுவப்பட்டது. பெருந்தோட்ட சமூகத்திற்கும் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் இடையில் நெருங்கிய இணைப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தை நிருவகிப்பதற்கு ஒரு முகாமைக் குழு நிறுவப் பட்டது. இவ்வாண்டில், தேயிலை வர்த்தகத்தில் கூடியளவு சுதந்திரத்தை அனு மதிக்கும் பொருட்டு ஏற்றுமதி ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல் இடைநிறுத்தப் பட்டது. கழிவுத் தேயிலையைத் தரக்குறைவான தேயிலையாகச் சந்தைப்படுத் தலைத் தவிர்க்கும் பொருட்டுத் தொடர்ச்சியான புதிய வழிமுறைகள் அறிவிக்கப் பட்டன.

1989 இல் தேயிலை மீதான பெறுமான விகித விற்பனை வரி பல தடவை கள் திருத்தி அமைக்கப்பட்டன. அதிகரித்துவரும் உற்பத்திச் செலவின் பின்னணி யில் தரமான தேயிலையின் உற்பத்தியை ஊக்குவிக்கும்பொருட்டு 1989 பெப்புரு வரி 1 இலிருந்து விற்பனை வரிக்கான குறைந்தமட்ட விலை கிலோக்கிறாமுக்கு ரூ. 44 இலிருந்து ரூ. 48 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன், ஆகக்கூடிய மாதாந்தத் தீர்வையாகக் கிலோக்கிறாமுக்கு ரூ. 10 உம் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாண்டின் நடுப்பகுதியில் தேயிலை விலைகளின் செயலாற்றம் தொடர்ந்தும் வேறுபடா திருந்தமையினால்1989ஓகத்து1இலிருந்து பெறுமானவிகித விற்பனை வரிமுற்றாக நீக்கப்பட்டது. எனினும் விலைகளின் கணிசமான மீட்சியைத் தொடர்ந்து இது மீண்டும் 1989 செத்தெம்பர் 1 இல் மீள் அறிமுகம் செய்யப்பட்டது. இதே வேளையில் விற்பனை வரிக்கான குறைந்தமட்ட விலை கிலோக்கிறாமிற்கு ரூ. 60 இற்கு உயர்த்தப்பட்டதுடன், ஆகக்கூடிய மாதாந்த தீர்வையாகக் கிலோக் கிறாமிற்கு ரூ. 15 நிர்ணயிக்கப்பட்டது.

தேயிலைத் தோட்டங்களினதும், சிறு உடைமைகளினதும் அபிவிருத்திக்காக மேலதிக நிதிகளைச் சேகரிக்கும் பொருட்டு 1989 ஒத்தோபர் 17 இலிருந்து தேயிலைத் தீர்வை ரூ. 2 இற்கு 50 சதத்தால் அதிகரிக்கப்பட்டது.

**இறப்பர்**

1989 இல் இறப்பர் உற்பத்தி 1,107 இலட்சம் கிலோக்கிறாம்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டின் உற்பத்தியைவிட 120 இலட்சம் கிலோக்கிறாம்களால் அல்லது 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பல தொழிற்சாலைகளையும் சேதப்படுத்தி, சாதாரண பால் எடுக்கும் தொழிற் பாடுகளையும் தடங்கலுறச் செய்த கிளர்ச்சி நடவடிக்கைகள் உற்பத்தியின் வீழ்ச்சிக்குக் காரணமாகின. 1989 இன் முதலாம் காலாண்டில் நிலவிய வரட்சி நிலைமைகளும், இரண்டாம் காலாண்டில் அநேகமான இறப்பர் வளரும் பிர தேசங்களில் பெய்த பெரும் பருவகால மழையும், வெள்ளமும் குறைந்த உற்பத்திச் செயலாற்றத்திற்குப் பொறுப்பான ஏனைய காரணிகளாகும்.

உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி பெரும்பாலும் அரசதுறைத் தோட்டங்களிலேயே ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1989 இல் இரு அரசதுறைக் கூட்டுத்தாபனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினதும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் இறப்பர் உற்பத்தி (வாங்கிய லேற்றெக்சிலிருந்து தயாரிக்கப்பட்ட இறப்பர் உட்பட) மொத்த இறப்பர் உற்பத்தியில் 31 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் இது முன்னைய ஆண்டின் அளவைவிட 14 சதவீதம் குறைவானதாகும். மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச் சபையின் உற்பத்தி 16 சதவீதத்தால் 150 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 13 சதவீதத்தால் 190 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் 1989 இல் தனியார்துறையின் இறப்பர் உற்பத்தி 760 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கி 1988 இல் அறிவிக்கப்பட்ட உற்பத்தியை விட 7 சதவீதம் குறைவாக விளங்கியது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989 இல் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 767 கிலோக்கிறாம்களுக்கு 74 கிலோக்கிறாம்களால் அல்லது 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. சராசரி விளைச்சலில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகள் 16 சதவீத வீழ்ச்சியையும், இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம் 12 சதவீத வீழ்ச்சியையும் பதிவு செய்தன.

1989 இல் இறப்பரின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு சிறிதளவால் 199,648 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இறப்பரின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பின் வீழ்ச்சி அடையும் போக்கிற்குக் குறிப்பிடத்தக்க காரணி, இறப்பரிலிருந்து ஏனைய பொருளாதார நோக்கங்களுக்குத் தொடர்ந்து மாறுதல் ஆகும். பாலெடுத்தலின் கீழான நிலப்பரப்பும் 144,416 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சி அடைந்து, அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த மீள்நடுகையைப் பெருமளவில் பிரதிபலித்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் பால் எடுத்தலின் கீழான நிலப்பரப்பு 7 எக்டேயர்களினால் வீழ்ச்சியடைந்திருக்கையில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 42 எக்டேயர் அதிகரிப்பைக் காட்டியது. தனியார்துறையின் பால் எடுத்தலின் கீழான நிலப்பரப்பு 1989 இல் 1,114 எக்டேயர்களினால் வீழ்ச்சியடைந்தது.

1989 இல் இறப்பர் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 21,700 மெற்றிக் தொன்களாக விளங்கின. இது கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட அளவைவிட 14 சதவீதம் குறைவானதாகும். வளமாக்கி வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சி, இவ்வாண்டில் நிலவிய சாதகமற்ற காலநிலைமைகள், குழப்ப நிலைமைகள் என்பவற்றின் கூட்டுவிளைவால் ஏற்பட்டதாகும். மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையால் முகாமைப்படுத்தப்படும் தோட்டங்களின் வளமாக்கிப் பாவனை சிறிதளவால் அதிகரித்திருக்கையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் முகாமைப்படுத்தப்படும் தோட்டங்களின் வளமாக்கிப் பாவனை கிட்டத்தட்ட 14 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்தது. 1989 இல் தனியார்துறையிலும் வளமாக்கிப் பாவனை கணிசமானளவில் வீழ்ச்சி அடைந்ததைக் கிடைக்கப்பெற்ற தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

அட்டவணை 1.11

## இறப்பர்த்துறை மீதான புள்ளி விபரங்கள் 1987—1989

| விடயம் | அலகு | 1987 | 1988(அ) | 1989(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கி. | 121.8 | 122.4 | 110.7 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1. பயிர்ச் செய்கைக்குட்பட்ட ... | '000 எக்டேயர்கள் | 201.9 | 200.2 | 199.6 |
| 2.2. பால் எடுக்கும் ... | ,, | 147.5 | 145.5 | 144.4 |
| 3. விளைச்சல் ... | கி. கி. /எக்டேயர் | 826 | 841 | 767 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் ... | '000மெ. தொன்கள் | 23.4 | 25.0 | 21.7 |
| 5. மீள்நடுகை ... | எக்டேயர்கள் | 5,635 | 4,167 | 4,925 |
| 6. விலைகள் ... | | | | |
| 6..1 ஏற்றுமதிகள் க. ஏ. பெ. ... | ரூ. / கி. கி | 27.63 | 37.33 | 36.17 |
| 6.2. கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 ... | ,, | 19.87 | 24.40 | 22.63 |
| 7. உற்பத்திச் செலவு (இ) ... | ,, | 13.95 | 13.41 | 15.01 |
| 8. ஏற்றுமதிகள் .. | ப. இ. கி. கி | 106.0 | 99.3 | 86.0 |
| 9. உள்நாட்டு நுகர்வு ... | ,, | 19.4 | 19.8 | 21.0 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. | 2,929.3 | 3,705.9 | 3,112.1 |
| | (சிஎஉ. ப. இ.) | (77) | (87) | (67) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) ... | | 1.4 | 1.7 | 1.ο |

மூலங்கள்: இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) தனியார்துறையின் தோட்டங்களினதும் சிறு உடைமைகளினதும் உற்பத்திச செலவின் நிறையேற்றப்பட்ட சராசரி.
(ஈ) பயிர் வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்.

1989இல் 4,925 எக்டேயர்கள் மீளப் பயிரிடப்பட்டன. இது, முன்னைய ஆண்டில் மீளப் பயிரிடப்பட்ட அளவைவிட 18 சதவீதம் அதிகமானதாகும். மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளால் மீளப் பயிரிடப்பட்ட அளவு 10 சத வீதத்தினால் அதிகரித்திருக்கையில் தனியார்துறையின் அளவு 42 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு முரணாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தால் மீளப் பயிரிடப்பட்ட பரப்பளவு 1989 இல் 917 எக்டேயர்களுக்கு 19 சதவீதத்தால் வீழ்ச்சி அடைந்தது. உலக வங்கியால் உதவியளிக்கப்பட்ட சிறு உடைமையாளர் இறப்பர் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விரிவடைந்த மீள்நடுகைத் தொழிற்பாடுகளும், 1989 இல் மீள்நடுகை உதவுதொகை வீதம் அதிகரித்துக் காணப்பட்டமையும் இணைந்து குறிப்பாகத் தனியார்துறையின் மீள்நடுகைச் செயலாற்றத்தின் மீது குறிப்பிடத்தக்க சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. இவ்வாண்டில் உலக வங்கியால் உதவியளிக்கப்பட்ட இறப்பர் சிறு உடமையாளர் புத்தாக்க நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2,354 எக்டேயர்கள் முக்கிய இறப்பர் வளரும் மாவட்டங்களில் மீள்நடுகை செய்யப்பட்டன. எனினும் 1989இல் இத்திட்டத்தின் கீழ் மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு இலக்குகளை அடையத் தவறிவிட்டது. அண்மைக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட மெதுவான வேகத் தினைக் கருத்திற் கொள்கையில் நிறைவேறாதிருக்கும் இலக்குகளைத் தீர்ப்பதற்கு ஒரு கணிசமானளவு உயர்ந்த மீள்நடுகை வீதம் அவசியமாகும்.

1989 இல் இறப்பர் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 86 எக்டேயர்களினால் அல்லது 10 சதவீதத்தினால் 799 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி அரச, தனியார்துறைகள் இரண்டிலும் காணப்பட்டன. 1989 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளால் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 7 எக்டேயர்களால் 119 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் பரப்பளவு 104 எக்டேயர்களால் 223 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

1989 சனவரியில் தனியார் பெருந்தோட்டங்களுக்கும், சிறு உடைமைகளுக்குமான இறப்பர் மீள்நடுகை, புதிய பயிரிடுகை என்பவற்றிற்கான உதவு தொகை எக்டேயருக்கு முறையே ரூ. 32,100 இற்கும், ரூ. 30,250 இற்கும் அதிகரிக்கப்பட்டது. இத்திருத்தத்துடன் புதிதாகப் பயிரிடுகை செய்யப்பட்ட மரங்கள் பால் எடுப்பதற்குப் போதுமான அளவில் முதிர்ச்சி அடையும்வரை அதிகரித்த வளமாக்கிப் பாவனை, ஏனைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவற்றை உறுதிசெய்யும் பொருட்டு உதவுதொகைக் கொடுப்பனவுத் தவணைகளின் எண்ணிக்கை 7 இலிருந்து 8 இற்கு அதிகரிக்கப்பட்டது.

அதிகரித்த கூலிகளினாலும், குறைந்த விளைச்சல்களினாலும் அரசதுறை, தனியார்துறை இரண்டினதும் இறப்பரின் உற்பத்திச் செலவு கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது. 1989 இல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளின் உற்பத்திச் செலவு கிலோக்கிராமிற்கு ரூ. 29.25 இற்கு 18 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களின் உற்பத்திச் செலவு கிலோக்கிராமிற்கு ரூ. 26.71 இற்கு 16 சதவீதத்தால் அதிகரித்தது. 1989 இல் தனியார்துறையின் உற்பத்திச் செலவும் கிலோக்கிராமிற்கு ரூ. 15.01 இற்கு 12 சதவீதத்தால் அதிகரித்தது. தனியார்துறைத் தோட்டங்களினதும் சிறு உடைமையாளர்களினதும் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் ஒப்பீட்டடிப்படையில் அரசதுறையினை விடக் குறைவாக விளங்கியமைக்கு அவை அரசதுறைத் தோட்டங்களினதைவிடத் தமது கூலி வீதத்தைக் குறைவாகப் பேணக்கூடியதாக இருந்தமையே காரணமாகும். இறப்பர்த்துறை 1989 இன் உயர்ந்த உற்பத்திச் செலவுப் பிரச்சனையுடன் குறைந்த விலைகளைக் கொண்டிருந்தது.

1989 இல் எல்லாவகை இறப்பரினதும் ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 36.17 இற்கு 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1989 இல் கொழும்பு ஏலங்களில் எல்லாவகை இறப்பரினதும் சராசரி விலைகளும் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. விலைகள் மீதான கீழ்நோக்கிய தாக்கத்திற்கு மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற முக்கிய இறப்பர் உற்பத்தி செய்யும் நாடுகளின் அதிகரித்த உற்பத்தியினைத் தொடர்ந்து உலக நிரம்பல் அதிகரித்தமையும் முக்கிய இறப்பர் நுகரும் நாடுகளின் உயர்ந்த தாங்கிருப்பு மட்டங்கள் ஒன்று சேர்ந்தமையால் அவர்களின் கேள்வி குறைவடைந்தமையும் காரணமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொழும்பு ஏலங்களில் ஆர்.எஸ்.எஸ். 1 இன் சராசரி விலை கிலோக்கிராமிற்கு ரூ. 22.63 இற்கு 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில், ஆர்.எஸ்.எஸ். 2 இன் விலை கிலோக்கிறாமிற்கு ரூ. 21.77 இற்கு 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1989 இல் லேற்றெக்ஸ் கிறேப் IX உம் கிலோக்கிராமிற்கு ரூ. 29.42 இற்கு

10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைகளின் உற்பத்தியாளர் இலாபம், 1988 இன் கிலோக்கிறாமிற்கான நேர்க்கணிய இலாபமான ரூ. 3.05 இலிருந்து எதிர்க்கணிய இலாபமான ரூ. 1.25 இற்கு வீழ்ச்சியடைந்தது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியாளர் இலாபமும் கிலோக்கிறாமிற்கு 1988 இன் ரூ. 3.45 இலிருந்து எதிர்க்கணிய இலாபமான ரூ. 1.14 இற்கு வீழ்ச்சியடைந்தது.

1989 இல் இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 210 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 6 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்து, மொத்த இறப்பர் உற்பத்தியில் 19 சதவீதத்திற்கு வகை கூறியது.

விரிவாக்கப் பணிகளை முன்னேற்றுவதாலும், உயர் விளைச்சலைக்கொண்ட நாற்றுப் பதியங்களை வழங்குவதாலும் இறப்பர் சிறு உடைமையாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு 1989 இல் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 27 எக்டேயர்களைக் கொண்ட இன்னுமொரு நாற்றுப்பண்ணையைத் திறப்பதற்கான ஆரம்ப வேலைகள் 1989 இல் இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டன. இத்துடன் நாற்றுப் பண்ணைகளை நிறுவும் பொருட்டு இறப்பர் சிறு உடைமையாளர்களை ஊக்கப்படுத்துவதற்குக் கொடுகடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

உற்பத்தி உச்ச மட்டத்தை அடைந்துவிட்டமையால் உற்பத்தித் திறனின் மட்டத்தின்மீது கணிசமானளவு தாக்கத்தைக் கொண்டுள்ள ஆராய்ச்சி, அபிவிருத்தி என்பனவற்றின் மீதுதான் இறப்பர்த்துறையின் மேம்பாடு தங்கியிருப்பது போல் தெரிகிறது. இறப்பர் பயிர்ச்செய்கையிலும் உற்பத்தியிலும் தனியார்துறை குறிப்பாக சிறு உடைமைகள் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொள்கையில் இறப்பர் துறையின் நீண்டகால அபிவிருத்தி தனியார்துறை உடைமைகளின் உற்பத்தித் திறனின் உயர் மட்டத்திலேயே பெருமளவில் தங்கியுள்ளது. எனவே, தனியார்துறைக்கு அதிசிறந்த நாற்றுப் பொருட்களை, சிறப்பாக மாறுபடும் வேளாண்மை காலநிலைமைகளுக்குப் பொருத்தமான உயர் விளைச்சலைக் கொண்ட நாற்றுப் பதியங்களை வழங்குவது அவசர தேவையாக இருக்கிறது. அத்துடன் சிறு உடைமையாளர்களும் ஒப்பீட்டடிப்படையில் குறைந்த அளவிலான வருமானத்தையேனும் இழக்கும் பயம் காரணமாகக் கூடிய விளைச்சலைக் கொடுக்கும் மரங்களை நாட்டுமுகமாக இறப்பர் மரங்களை வேருடன் பிடுங்குவதற்குத் தயக்கம் காட்டினர். இது தொடர்பாக இறப்பர் மரங்களின் முதிர்வுக் காலத்தைக் குறைப்பதற்கான சாத்தியத்தை ஆராய்வதற்கான ஆராய்ச்சி நடவடிக்கைகளைத் தீவிரமாக்குவதற்கான அத்தியாவசிய தேவை ஒன்று இருக்கிறது.

**தெங்கு**

தொடர்ச்சியான இரு வருட வீழ்ச்சிகளுக்குப் பின், 1989 இல் தெங்கு உற்பத்தி 24,860 இலட்சம் காய்களுக்கு 28 சதவீதத்தால் மீட்சியடைந்தது. இதற்கு மிகக் கூடியளவில், முன்னைய ஆண்டின் திருந்திய மழை வீழ்ச்சியின் காலம் தாழ்த்திய விளைவு காரணமாகும். தெங்குடனான உயிரியல் உற்பத்தி வட்டத்தின் மீள்வருகையும் உற்பத்தியின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் 1989 இன் உற்பத்தி 1986 இல் பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடிய உற்பத்தியான 30,390 இலட்சம் காய்களைவிடக் கணிசமானளவு குறைவானதாகும்.

காய்களின் அதிகரித்த வழங்கலைப் பிரதிபலிக்கும் வகையில் 1989 இல் மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளின் உற்பத்தி கணிசமானளவில் அதிகரித்தது. இதன்படி தேங்காய்த்துருவலினதும், தேங்காய் எண்ணெயினதும் உற்பத்தி இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்ததுடன், உலர்த்திய தேங்காயின் அளவு 41 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. உடன் காய்களின் ஏற்றுமதி அளவும் 10 இலட்சம் காய்களால் அதிகரித்தது. எனினும் 1989 இல் தேங்காய்த்துருவலின் உற்பத்தியும், உலர்த்திய தேங்காயின் ஏற்றுமதி அளவும் 1987 இல் பதிவு செய்யப்பட்ட மட்டங்களைவிட குறைவாக விளங்கின. பொதுவாக அநேகமான பயிர்த்துறைகளைக் கடுமையாகப் பாதித்த குழப்பமான சூழ்நிலைகள் காய் உற்பத்தியில் ஒரு சிறிய தாக்கத்தை மட்டுமே கொண்டிருந்தன. எனினும் வேலை நிறுத்தங்கள், போக்குவரத்து இடையூறுகள் என்பன அறுவடை செய்யப்பட்ட காய்களை உரிய நேரத்தில் பதனிடுவதனைத் தாமதப்படுத்தியதன் மூலம் தேங்காய்களின் தரத்தினைக் குறைவடையச் செய்தது. இது தேங்காய்த்துருவல், உலர்த்திய தேங்காய் என்பன வற்றின் தரத்திலும் அளவிலும் ஒரு தாக்கத்தினைக் கொண்டிருந்தது. இதன் விளைவாகப் பெருமளவு தொகையான தேங்காயினைத் தேங்காயெண்ணெய்க்காகப் பதனிட வேண்டியிருந்தது. இதன்படி, மொத்த உற்பத்தியில் தேங்காய்களுக்குச் சமனான தேங்காய் எண்ணெயின் பங்கு 1988 இன் 14 சதவீதத்திலிருந்து 1989 இல் 24 சதவீதத்திற்கு அதிகரித்தது.

1988 இல் ஒரு சிறிய வீழ்ச்சியைப் பதிவுசெய்த தெங்குத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1989 இல் மேலும் 37,500 மெற்றிக் தொன்களுக்கு 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. தெங்குத்துறைக்கான வளமாக்கி வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சி, வரட்சி நிலைமைகளாலும், உள்நாட்டுக் குழப்பங்களினாலும் பாதிக்கப்பட்ட இவ்வாண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளுக்கு முழுமையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இவ்வாண்டில், தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை 37 வளமாக்கிக் களஞ்சியங்களைப் பேணியதுடன், 1988 இன் 3,137 மெற்றிக் தொன்களுக்கெதிராக 3,336 மெற்றிக் தொன்கள் வளமாக்கியைப் பகிர்ந்தளித்தன.

1989 இல் புதிய பயிரிடல் நடவடிக்கைகள் தவிர்ந்த பயிரிடல் நடவடிக்கைகள் ஒரு பின்னடைவினைக் கொண்டிருந்தன. உள்நாட்டுக் குழப்பங்களும், உதவு தொகைக் கொடுப்பனவுகளின் உண்மைப் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் பயிரிடல் நடவடிக்கைகைளைக் கடுமையாகப் பாதித்தன. 1989 இல் புத்தாக்கம் செய்யப்பட்ட தெங்கு நிலங்களின் அளவு 1,142 எக்டேயர்களினால் அல்லது 27 சதவீதத்தினால் 3,035 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்ததுடன் புத்தாக்கத்திற்காகச் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகை 26 சதவீதத்தால் ரூ. 56 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1989 இல் கீழ்ப் பயிரிடப்பட்டதும், மீள் பயிரிடப்பட்டதுமான மொத்த நிலப்பரப்பு 1,619 எக்டேயர்களாக விளங்கி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு முரணாக இதன்பேரில் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகை 23 சதவீதத்தால் ரூ. 210 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1989 இல் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு, மகாவலிப் பிரதேசத்தில் அதிகரித்த புதிய பயிரிடல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து 2,023 எக்டேயர்களுக்குக் கணிசமானளவில் 75 சதவீதத்தால் அதிகரித்தது. புதிய நடுகைக்கான உதவுதொகைக் கொடுப்பனவுகளும் 32 சதவீதத்தால் ரூ. 170 இலட்சத்திற்கு அதிகரித்தன.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989 இல் தெங்கு நிலங்களின் இடைப் பயிரிடல் குறைவான மட்டத்திலேயே இருந்தது. முன்னைய ஆண்டின் 143 எக்டேயர்களுக்கெதிராக, 1989 இல் கொக்கோ, கோப்பி, மிளகு என்பவற்றால் இடைப்பயிர்ச் செய்கை செய்யப்பட்ட தெங்கு நிலங்களின் அளவு 89 எக்டேயர்களாக மட்டுமே விளங்கியது. நாற்றுகள் வழங்கும் இச்செயற்றிட்டத்தின்கீழ், தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை 1989 இல் கிட்டத்தட்ட 12 இலட்சம் நாற்றுக்களைப் பகிர்ந்தளித்தது. இது கடந்த ஆண்டின் அளவைவிட 62 சதவீதம் கொண்ட கணிசமானதொரு அதிகரிப்பாகும். தெங்குப் பயிர்ச் செய்கைச் சபை 33 தெங்கு நாற்று மேடைகளைப் பேணியது. இவ்வாண்டில் பலதரப்பட்ட பயிர்ச்செய்கைத் திட்டங்களின் கீழ்ப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கான உதவுதொகைக் கொடுப்பனவுக்கான நிதியங்களைப் பெறுவதில் தெங்

அட்டவணை 1.12

**தெங்குத்துறை மீதான புள்ளி விபரங்கள் 1987—1989**

| விடயம் | அலகு | 1987 | 1988 | 1989 (அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) ... | ப. இ. காய்களில் | 2,291 | 1,936 | 2,486 |
| 1.1. தேங்காய்த் துருவல் ... | ப. இ. காய்களில் (இ) | 350 | 155 | 318 |
| 1.2. தேங்காய் எண்ணெய் ... | ப. இ. காய்களில் (இ) | 573 | 276 | 597 |
| 1.3. உலர்த்திய தேங்காய் (ஈ) ... | ப. இ. காய்களில் (இ) | 44 | 29 | 41 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் | 16 | 12 | 13 |
| 1.5. உள்நாட்டு தேங்காய் நுகர்வு (உ) ... | ப. இ. காய்களில் | 1,368 | 1,449 | 1,477 |
| 2. சராசரி ஏற்றுமதிவிலை (க எ. பெ.) ... | காய்க்கு ரூபா | 2.64 | 4.00 | 3.35 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 42.2 | 42.0 | 37.5 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 0.73 | 0.81 | 0.85 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல்(ஊ) ... | எக்டேயர்கள் | 2,922 | 2,049 | 1,619 |
| 6. புதிய பயிரிடல் (ஊ) ... | எக்டேயர்கள் | 1,858 | 1,153 | 2,023 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ப. இ. ரூபா | 2,140 | 1,539 | 2,865 |
| | (சிஎஉ ப. இ.) | (56) | (36) | (62) |
| 7.1. உள்ளீட்டு உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 1,423 | 896 | 1,920 |
| | (சிஎஉ. ப. இ.) | (37) | (21) | (42) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 717 | 643 | 945 |
| | (சிஎஉ. ப. இ.) | (19) | (15) | (20) |
| 8. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (எ) ... | | 2.6 | 2.7 | 2.8 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகம்..

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டாது.)

(இ) தேங்காய்க்குச் சமனான ஒரு — மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்.
— மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
— மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்.

(ஈ) ஏற்றுமதிகள் மட்டும்.

(உ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 90 காய்களென்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பயன்பாட்டினைத் தவிர.

(ஊ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(எ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

குப் பயிரிடல் சபை இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியது. எனினும் தெங்குக் கைத்தொழில் அபிவிருத்திக்கும், அதன் உறுதிப்பாட்டிற்கும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் இன்றியமையாதன என்ற உண்மையைக் கருத்திற் கொண்டு மீள்நடுகைத் திட்டங்களின் கீழான கடப்பாடுகளை ஈடுசெய்வதற்காகத் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபைக்கு நிதி உதவிகளை வழங்கும் பொருட்டுத் தெங்குக்கான சமநிலைப்படுத்தும் நிதியம் ரூ. 250 இலட்சத்தை வழங்கியது.

1989 இல் உற்பத்தியில் ஏற்பட்ட மீட்சி காரணமாக அதிகரித்த வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து உள்நாட்டுச் சந்தையில் தேங்காயின் விலைகள் கீழ்நோக்கி அசைந்தன. தேங்காயொன்றின் சராசரி ஏற்றுமதி க.ஏ.பெ. விலையும் 1988 இல் காயொன்றிற்கு ரூ. 4.00 இலிருந்து 1989 இல் காயொன்றிற்கு ரூ. 3.35 இற்கு வீழ்ச்சியடைந்தது முக்கிய தெங்கு உற்பத்தி செய்யும் நாடுகளில் இருந்த முன்னேறிய வழங்கல் நிலைமை, மந்தமான கேள்வி, பதிலீட்டு உற்பத்திகளின் அதிகரித்த கிடைப்பனவு என்பன காரணமாக மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் விலைகளும் பன்னாட்டுச் சந்தையில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. 1989 இல் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதி அளவு 5,720 இலட்சம் காய்களுக்கு இரு மடங்கிற்கும் மேலாக அதிகரித்தது. 1989 இல் தேங்காயின் சராசரி உற்பத்திச் செலவு காய்க்கு ரூ. 0.85 ஆக மதிப்பிடப்பட்டு 1988 இல் காய்க்கான விலையான ரூ. 0.81 ஐவிட 5 சதவீதம் உயர்வானதாக விளங்கியமைக்கு அதிகரித்த கூலிகள் முக்கிய காரணமாகும்.

## ஏனைய வேளாண்மை உற்பத்திகள்

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

தேயிலை, இறப்பர், தெங்கு தவிர்ந்த பரந்தளவிலான நீண்டகாலப் பயிர்களை சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உள்ளடக்கியுள்ளது. இப்பயிர்கள் பொதுவாக வீட்டுத் தோட்டங்களிலும் சிறு உடைமைகளிலும் கலப்புப் பயிர்களாக வளர்க்கப்படுகின்றன. ஆகவே உற்பத்தி மீதான நம்பத்தகுந்த தரவைப் பெறுவது கடினமாகும். எனவே இவற்றின் உள்நாட்டு நுகர்வு, இருப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் மிகச் சிறிதளவே என்ற ஊகத்தின் அடிப்படையில் அவற்றின் உற்பத்திச் செயலாற்றத்தினை மதிப்பிடுவதற்கு இப்பயிர்களின் ஏற்றுமதி அளவுகள் குறிகாட்டிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஏற்றுமதித் தரவின் அடிப்படையில் கறுவா, முந்திரிப் பருப்பு தவிர்ந்த எல்லா முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களினதும் உற்பத்தி 1989 இல் ஒரு கடுமையான பின்னடைவுக்கு உட்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989 இல் கறுவாவின் ஏற்றுமதி அளவு 10 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், முந்திரிப் பருப்புக்களின் ஏற்றுமதி அளவு 19 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் இவ்வகையின் கீழ்வரும் மூன்று ஏனைய முக்கிய பயிர்களான மிளகு, கராம்பு, கோப்பி என்பன அவற்றின் அளவில் முறையே 41 சதவீத, 86 சதவீத, 57 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. கொக்கோ (10 சதவீதம்), சாதிக்காயும் சாதிப்பத்திரியும் (20 சதவீதம்), ஏலக்காய் (9 சதவீதம்) என்பவற்றின் ஏற்றுமதி அளவுகளும் வீழ்ச்சியடைந்ததுடன் குறைந்த உற்பத்திச் செயலாற்றத்தை எடுத்துக் காட்டின.

முன்னைய மூன்று ஆண்டிலான போக்கைத் தொடர்ந்து சிறு ஏற்றுமதிப் பயிர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1989 இல் 5,600 மெற்றிக் தொன்களுக்கு 19 சதவீதத்தால் கணிசமான்ளவில் அதிகரித்தன.

ஏற்றுமதிப்பயிர்த் திணைக்களத்தின்படி சிறு ஏற்றுமதிப்பயிர் உதவித் திட்டத்தின் கீழ்ப் புதிதாகப் பயிரிடப்பட்ட, மீளப் பயிரிடப்பட்ட, புத்தாக்கம் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1988 இன் 1,765 எக்டேயர்களிலிருந்து 1989 இல் 1,860 எக்டேயர்களுக்கு 5 சதவீதத்தால் அதிகரித்தது. மிளகு, கறுவா என்பவற்றின் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் அளவு முன்னைய ஆண்டைவிட முறையே 153 எக்டேயர்களாலும், 18 எக்டேயர்களாலும் அதிகரித்திருக்கையில் கொக்கோ, ஏலக்காய், கராம்பு என்பன பயிரிடப்பட்ட நிலப் பரப்பின் அளவு முறையே 56 எக்டேயர்களாலும், 28 எக்டேயர்களாலும், 22 எக்டேயர்களாலும் வீழ்ச்சி அடைந்தன. கொக்கோ, கறுவா, ஏலக்காய் என்பனவற்றின் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்புகளும் 1989 இல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தன. எனினும் கறுவா, கொக்கோ என்பவற்றின் புத்தாக்கம் செய்யப்பட்ட நிலப்பரப்புகள் 1989 இல் முறையே 531 எக்டேயர்களுக்கு 97 எக்டேயர்களாலும், 20 எக்டேயர்களுக்கு 10 எக்டேயர்களாலும் அதிகரித்தன.

சிறு ஏற்றுமதிப் பயிர் உதவித் திட்டத்தின்கீழ்ச் செலுத்தப்பட்ட மொத்த உதவுதொகை, 1988 இன் ரூ. 141 இலட்சத்திலிருந்து 1989 இல் ரூ. 191 இலட்சத்திற்கு 36 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. முன்னைய ஆண்டைப் போலவே, மிளகின் பயிரிடல் நடவடிக்கைகளுக்கான உதவுதொகைக் கொடுப்பனவு மொத்த உதவுதொகைக் கொடுப்பனவுகளின் 40 சதவீதத்திற்கு வகை கூறியது.

## நெல்

1988 இல் குறிப்பிடத்தக்க 16 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த நெல் உற்பத்தி 1989 இல் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்தது. 1989 இல் நெல் உற்பத்தி 20.6 இலட்சம் மெற்றிக் தொன்கள் (990 இலட்சம் புசல் நெல் அல்லது 14.4 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி) எனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1979 இல் இருந்து பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த உற்பத்தியாக இது காணப்பட்டதோடு முன்னைய ஆண்டின் உற்பத்தியைவிட 17 சதவீத வீழ்ச்சியை எடுத்துக் காட்டுவதாகவும் இருந்தது. 1989 இன் நெல் உற்பத்தியானது இலக்கிடப்பட்ட உற்பத்தி மட்டத்தில் கிட்டத்தட்ட 70 சதவீதத்திற்கு மட்டுமே வகை கூறியது. உற்பத்தியின் வீழ்ச்சி 1988/89 பெரும்போகம், 1989 சிறுபோகம் ஆகிய இரண்டிலும் பிரதிபலித்தது. விதைக்கப்பட்டதும் அறுவடை செய்யப்பட்டதுமான பரப்பு கணிசமாகக் குறைவடைந்தமையும் முக்கிய நெல் உற்பத்திப் பிரதேசங்களில் நிலவிய வரட்சி நிலைமைகளின் காரணமாகச் சராசரி விளைச்சல் சிறிதளவு குறைவடைந்தமையுமே இவ்வீழ்ச்சிக்கான பெருமளவு காரணங்களாகும். உள்நாட்டுக் குழப்பங்களும் 1989 இல் நெல் உற்பத்தியைக் கடுமையாகப் பாதித்ததாகக் கூறப்படுகின்றது.

மொத்த நெல் உற்பத்தியில் விதைநெல் தேவைகளுக்கும் விரையங்களுக்கும் சீராக்கஞ் செய்யப்பட்டபின் கிடைக்கும் அரிசிக்குச் சமனான நுகர்வுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி 1989 இல்

12.3 இலட்சம் மெற்றிக் தொன்களாக விளங்கியது. மதிப்பிடப்பட்ட உள்நாட்டு அரிசித் தேவைகளில் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட 88 சதவீதத்திற்கு எதிராக 73 சதவீதத்திற்கு மட்டுமே இது வகை கூறியது. தேவையின் பற்றாக்குறை முக்கியமாக 316,000 மெற்றிக் தொன் இறக்குமதிகளினூடாக நிறைவு செய்யப்பட்டது.

அட்டவணை 1.13

## நெல்துறை மீதான புள்ளி விபரங்கள் 1988—1989

| விடயம் | அலகு | 1988 | | | 1989 (அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 545 | 323 | 868 | 469 | 258 | 727 |
| வளமாக்கி வழங்கல்கள் (ஆ) | '000மெ.தொன்கள் | 134 | 70 | 204 | 105 | 51 | 156 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 190 | 55 | 245 | 91 | 57 | 148 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 499 | 317 | 816 | 440 | 250 | 690 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) ... | கி. கிறாம்கள் | 3,440 | 3,370 | 3,413 | 3,429 | 3,279 | 3,374 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 443 | 282 | 725 | 392 | 220 | 612 |
| உற்பத்தி ... | '000மெ. தொன்கள் ('000புசல்கள்) | 1,525 (73,059) | 952 (45,617) | 2,477 (118,676) | 1,342 (64,330) | 721 (34,550) | 2,063 (98,88) |
| உ.வி.தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை (ஈ) ... | '000மெ. தொன்கள் | 102 | 0.3 | 105 | 05 | — | 05 |
| அரிசி இறக்குமதி (நெல்லிற்குச் சமன்) ... | '000மெ. தொன்கள் ,, | — (—) | — (—) | 189 (278) | — (—) | --- (—) | 292 (429) |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை உணவு, கூட்டுறவு அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும் கலண்டர் ஆண்டினதும் வளமாக்கி வழங்கல்கள் அடிப்படையில் மாறுபட்டதாகும். பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்றோபர்-மாச்சு/ஏப்பிறல்) சிறுபோகத்தையும் (ஏப்பிறல்/மே-ஓகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும்போக சிறுபோகத்திறகான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

(ஈ) ஓகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோக அறுவடை கொள்வனவு செய்யப்பட்டவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

13.4 இலட்சம் மெற்றிக் தொன்களென (643 இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்டுள்ள 1988/89 பெரும்போகத்தின் நெல் உற்பத்தி முன்னைய பெரும் போகத்துடன் ஒப்பிடுகையில் 182,224 மெற்றிக் தொன்கள் அல்லது 12 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் சிறிதளவு வீழ்ச்சியை மட்டுமே பதிவு செய்தமையினால் உற்பத்தி வெளியீட்டின் வீழ்ச்சிக்குப் பயிர் செய்யப்பட்டதும் விதைக்கப்பட்டதுமான பரப்பு குறைவடைந்தமையே முதன்மைக் காரணமாக விளங்கியது. 1988 இன் பிற்பகுதியில் உலர் வலயங்களின் முக்கிய நெல் உற்பத்திப் பிரதேசங்களில் நிலவிய வரட்சி குளங்களிலிருந்தான நீர் வழங்கலைத் தாமதப்படுத்தியதோடு உள்நாட்டுக் குழப்பங்களும் குறைந்த வளமாக்கிப் பிரயோகமும் விதைக்கப்பட்ட பரப்பு, சராசரி விளைச்சல் ஆகிய இரண்டையும் கடுமையாகப் பாதித்தன. விதைக்கப்பட்ட பரப்பு கணிசமாக 16 சதவீதத்தினாலும் சராசரி விளைச்சல் சிறிதளவாலும் வீழ்ச்சியுற்றன. உற்பத்தியின் கணிசமான வீழ்ச்சிகள் குருநாகல், அநுராதபுரம், மன்னார், அம்பாந்தோட்டை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் அவதானிக்கப்பட்டன.

7.2 இலட்சம் மெற்றிக் தொன்களென (345 இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்டுள்ள 1989 இன் சிறுபோக நெல் உற்பத்தியும் முன்னைய சிறுபோகத்தின் உற்பத்தியைவிட 230,952 மெற்றிக் தொன்கள் அல்லது 24 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது. சிறுபோகத்தில் நிலவிய வரட்சி நிலைமைகளே உற்பத்தி வெளியீட்டின் வீழ்ச்சிக்குப் பெருமளவு காரணமாகின. பருவம் தவறிய மழை வீழ்ச்சி, வெள்ளப் பெருக்குகள், குறைந்த வளமாக்கிப் பயன்பாடு என்பன நெற்றுறையின் மீதான வரட்சியின் பாதகமான தாக்கங்களை மேலும் வலுப்படுத்தின. உலர் வலய மாவட்டங்களில் கணிசமான உற்பத்தி வீழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன. சிறுபோகத்தில் 92,100 மெற்றிக் தொன் கொண்ட (58 சதவீதம்) அதி உயர்ந்த உற்பத்தி வீழ்ச்சியினைக் குருநாகல் மாவட்டம் பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டம் 56,700 மெற்றிக் தொன் கொண்ட (34 சதவீதம்) வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989 பயிர்ச்செய்கை ஆண்டில் எக்டேயர் ஒன்றுக்கான ஆண்டுச் சராசரி விளைச்சல் சிறிதளவாக ஒருசதவீதத்தினால் 3,374 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1988/89 பெரும் போகத்தில் எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் சிறிதளவினால் 3,429 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில், 1989 இன் நேரிணையான போகத்துடன் ஒப்பிடுகையில் 1989 சிறுபோகத்தில் 2.3 சதவீதத்தினால் 3,279 கிலோக்கிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. பெரும்போகத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தவிர்ந்த ஏனைய நெல் உற்பத்திப் பிரதேசங்கள் (முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களும் மழை நீரின் உதவியுடன் பயிரிடப்படும் பிரதேசங்களும்) குறைந்த சராசரி விளைச்சல்களைப் பதிவு செய்தன. முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான பிரதேசங்கள் அதியுயர் 3 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் உற்பத்தித்திறன் 3 சதவீதத்தினால் அதிகரித்தது. 1989 சிறுபோகத்தில் முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான பிரதேசங்களிலும் மழை நீரின் உதவியுடன் பயிர் செய்யப்படும் பிரதேசங்களிலும் சராசரி விளைச்சல் முறையே 5 சதவீதத்தினாலும், 8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தவேளையில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான பிரதேசங்களின் சராசரி விளைச்சல் கிட்டத்தட்ட 3 சதவீதத்தினால் அதிகரித்தது. முன்னைய ஆண்டினைப் போலவே பெரும்போகத்தினதும் சிறுபோகத்தினதும்

அதியுயர் சராசரி விளைச்சல் உடவளவைப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்ட தோடு இது 1988/89 பெரும்போகத்தில் எக்டேயர் ஒன்றுக்கு 5,125 கிலோக் கிறாம்களாகவும் 1989 சிறுபோகத்தில் எக்டேயர் ஒன்றுக்கு 5,249 கிலோக் கிறாம்களாகவும் விளங்கியது.

1989 பயிர்ச்செய்கை ஆண்டில் விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு 16 சத வீதத்தினால் அல்லது 140,852 எக்டேயர்களினால் 726,958 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. முக்கியமாக இரு போகங்களிலும் நிலவிய வரட்சி நிலைமை களினால் 1988/89 பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு 14 சதவீதம் அல்லது 75,778 எக்டேயர்களினால் 468,850 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் 1989 சிறுபோகத்தில் 20 சதவீதம் அல்லது 65,074 எக்டேயர்களினால் 258,108 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. விதைக்கப் பட்ட பரப்பின் கணிசமான குறைப்புக்கள் முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங் களான குருநாகல், அநுராதபுரம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டன. 1988/89 பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான பிரதேசங்களில் மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் பெரும்போகத்துடன் ஒப் பிடுகையில் முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான பிரதேசங்களும் மழை நீரின் உதவியுடன் பயிர் செய்யப்படும் பிரதேசங்களும் முறையே 12 சதவீத, 9 சதவீத வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. 1989 சிறுபோகத்தில் சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களின் கீழான பிரதேசங்களிலும் மழை நீரின் உதவியுடன் பயிர் செய்யப்படும் பிரதேசங்களிலும் விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பு முறையே 36 சதவீதத்தினாலும், 25 சதவீதத்தினாலும் கடுமையாக வீழ்ச்சியடைந்த வேளையில் முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழான பரப்பும் கணிசமாக 10 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 1989 பயிர் செய்கையாண்டில் அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பும் 15 சதவீதத்தினால் 689,753 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1988/89 பெரும்போகத்திலும் 1989 சிறுபோகத்திலும் அறுவடை செய்யப்பட்ட பரப்பு முறையே 12 சதவீதத்தினாலும், 21 சத வீதத்தினாலும் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. விதைக்கப்பட்ட மொத்தப் பரப் பிற்கும் அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பிற்கும் இடையிலான வேறு பாடான பயிர் இழப்பு 1988/89 பெரும்போகத்தில் 29,063 எக்டேயர்கள் அல்லது விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பில் 6 சதவீதமாகும். முன்னைய பெரும்போகத்தில் ஒப்பிடத்தக்க வீதம் 8 சதவீதமாகக் காணப்பட்டது. 1989 சிறுபோகத்தில் 3 சதவீதமாக மதிப்பிடப்பட்ட பயிர் இழப்பு வீதம் முன்னைய சிறுபோகத்திலும் பார்க்கச் சிறிதளவு உயர்வாகக் காணப்பட்டது.

1989 இல் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கலில் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது. வேளாண்மை, உணவு, கூட்டுறவு அமைச்சின்படி பயிர்ச்செய்கை ஆண்டில் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல் 156,212 மெற்றிக் தொன்களாக இருந்தது. 1988 இல் வழங்கப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் இது 24 சதவீத வீழ்ச்சியொன்றினை எடுத்துக் காட்டியது. வளமாக்கி வழங்கல்கள் 1988/89 பெரும்போகத்தில் 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் 1989 சிறு போகத்தில் 27 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. விதைக்கப்பட்ட ஒவ்வொரு எக்டேயருக்குமான வளமாக்கிப் பாவனையின் சராசரி அளவு பெரும்போகத்தில் 9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் சிறுபோகத்தில் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1989 இல் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெற் சந்தைப்படுத்தும் சபையின் கொள்வனவுகள் 5,036 மெற்றிக் தொன்களுக்கு (241,325 புசல்கள்) 95 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்து, உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் இதுவரை கொள்வனவு செய்யப்பட்டவற்றில் மிகக் குறைந்த மட்டமாக விளங்கியது. உலர் வலயத்திலுள்ள வரட்சியினால் பாதிக்கப்பட்ட முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களிலிருந்தான குறைந்த கொள்வனவுகளே உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான கொள்வனவுகளின் இந்த குறிப்பிடத் தக்க வீழ்ச்சிக்குப் பெருமளவு காரணமாக அமைந்தது. குறைந்த நெல் உற்பத்தி, திறந்த சந்தையில் உயர்வான விலைகள், நாட்டின் அமைதியின்மை என்பன நெல் சந்தைப்படுத்தும் சபையின் பொதுவான கொள்வனவு நடவடிக்கைகளைக் கடுமையாகப் பாதித்தன. அம்பாறை, பதுளை ஆகிய மாவட்டங்களிலிருந்தான கொள்வனவுகள் 1989 இல் நெற் சந்தைப்படுத்தும் சபையின் மொத்தக் கொள் வனவுகளில் 89 சதவீதத்திற்கு வகை கூறின.

1989 இல் நெல்லின் உத்தரவாத விலை புசல் ஒன்றுக்கு ரூ. 80 ஆக மாறாது காணப்பட்டது. முக்கிய நெல் உற்பத்திப் பிரதேசங்களில் தனியார்துறை வியாபாரிகள் நெற் கொள்வனவில் சுறுசுறுப்பாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுகளைப் போலன்றி 1989 இன் எல்லாப் பாகத்திலும் நெல்லின் திறந்த சந்தை விலைகள் உத்தரவாத விலையைவிட அதி உயர்ந்ததாகக் காணப் பட்டன. அரிசியின் கிடைக்கத்தக்க தன்மை குறைந்துள்ளமையைப் பிரதிபலிக்கும் வகையில் கொழும்புச் சந்தையில் கிலோக்கிறாம் ஒன்றுக்கான அரிசியின் சராசரி சில்லறை விலை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989 இல் கிட்டத்தட்ட 35 சதவீதத்தினால் ரூ. 14.96 இற்கு அதிகரித்தது.

**சீனி**

1988 இல் 83 சதவீதத்தினால் 53,521 மெற்றிக் தொன்களுக்குக் குறிப் பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்த சீனி உற்பத்தி 1989 இல் 53,983 மெற்றிக் தொன்களுக்குக் கிட்டத்தட்ட ஒரு சதவீதமான சிறிதளவு அதிகரிப்பை மட்டுமே பதிவு செய்தது. உற்பத்தியின் முழு அதிகரிப்புக்கும் இங்குரான, கந்தளாய் தொழிற்சாலைகள் வகை கூறின. முக்கியமாக அறுவடை செய்யப்பட்ட பரப்பின் அதிகரிப்பு கூடிய சராசரி விளைச்சல், தனிப்பட்ட பெருமளவு கரும்புக் கொள்வனவுகள் என்பன காரணமாக இங்குரான தொழிற்சாலையின் சீனி உற்பத்தி தொடர்ச்சியான மூன்றாவது ஆண்டாக 29 சதவீதத்தினால் அதிகரித் தது. தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் வீழ்ச்சியைப் பதிவு செய்தபின் 1989 இல் கந்தளாய் தொழிற்சாலை 2,305 மெற்றிக் நொன்களுக்கு 62 சதவீத உற்பத்தி அதிகரிப்பைப் பதிவு செய்தது. கந்தளாய்த் தொழிற்சாலையின் உற் பத்தி அதிகரிப்பு கூடிய சராசரி விளைச்சலின் விளைவாக ஏற்பட்டதாகும். வேலைத் தடங்கல், வேலை நேரங்களின் குறைப்பு, அறுவடைக்காக வெளிபிடங் களிலிருந்து வரும் அமயத் தொழிலாளர்களின் பற்றாக்குறை என்பனவற்றிற்குக் காரணமாகிய உள்நாட்டுக் குழப்பங்கள், நிலம் ஒதுக்கப்பட்டவர்களினால் நிலங்கள் கைவிடப்பட்டமை என்பனவற்றின் பாதகமான தாக்கங்களைக் கருத்திற் கொள் ளும்போது இவ்விரண்டு தொழிற்சாலைகளினதும் உற்பத்தி அதிகரிப்பு பாராட்டத் தக்கதாகும். மேலும் பாதுகாப்பு நோக்கங்களுக்காக வேண்டி பயிர்க் காவலர் களுக்கு வழங்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து பயிர்ப் பாதுகாப்பு முறை நலிவடைந்தமையால் காட்டு யானைகள் பயிர்களைச் சேதப்படுத்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாறாக, 1989 இல்

## அட்டவணை 1.14

### சீனி உற்பத்தித்துறை மீதான புள்ளி விபரங்கள் 1988-1989

| விடயம் | அலகு | இங்குரான சீனித் தொழிற்சாலை | | கந்தளாய் சீனித் தொழிற்சாலை | | செவனகல சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 | 1988 | 1989 |
| 1. கரும்பிற்குட்பட்ட நிலப்பரப்பு (நாட்டப்பட்டதும் முளை தோன்றியதுமான) ... | ஹெக்டேயர்கள் | 2,898 | 2,560 | 1,115 | 1,302 | 3,059 | 1,443 | 4,585 | 4,700 | 11,657 | 10,005 |
| 2. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு ... | ஹெக்டேயர்கள் | 2,075 | 2,409 | 1,006 | 904 | 1,772 | 1,440 | 4,258 | 3,944 | 9,111 | 8,697 |
| 3. அறுவடை செய்யப்பட்ட கரும்பு ... | மெ.தொன்கள் | 109,993 | 132,118 | 28,002 | 38,166 | 153,262 | 117,174 | 268,400 | 210,822 | 559,657 | 498,280 |
| 4. சராசரி விளைச்சல் ... | மெ. தொன்கள்/ ஹெக்டேயர்கள் | 26.97 | 29.92 | 28.00 | 40.45 | 69.89 | 36.90 | 63.03 | 53.45 | 61.43 | 57.29 |
| 5. தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு ... | மெ.தொன்கள் | 47,317 | 54,163 | 10 | 13 | 854 | 40 | 116,508 | 133,153 | 164,689 | 187,329 |
| 6. உற்பத்தி செய்யப்பட்ட சீனி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) ... | மெ.தொன்கள் | 11,084 | 14,250 | 1,427 | 2,305 | 11,038 | 9,078 | 29,972 | 28.350 | 53,521 | 53,983 |
| 7. சீனி பெறப்பட்ட வீதம் ... | % | 7.05 | 7.65 | 5.09 | 6.08 | 7.26 | 7.77 | 7.91 | 8.2 | 7.39 | 7.81 |

மூலம்: இலங்கை சீனிக் கூட்டுத்தாபனம்.
வரையறுக்கப்பட்ட பெல்வத்தைச் சீனிக் கூட்டு நிலையம்.

செவனகல தொழிற்சாலையின் உற்பத்தி 18 சதவீதத்தினால் 9,078 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தவேளையில் பெல்வத்தை தொழிற்சாலையின் உற்பத்தி 5 சதவீதத்தினால் 28,350 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. பொதுவான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி தொழிலாளர் பற்றாக்குறையை ஏற்படுத்திய உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகப் பயிர் செய்யப்பட்டதும் அறுவடை செய்யப்பட்டதுமான நிலப்பரப்பு குறைந்தமையினதும் சராசரி விளைச்சல் வீழ்ச்சியடைந்தமையினதும் விளைவாகவே இவ்விரு தொழிற்சாலைகளினதும் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.

1989 இல் கரும்புப் பயிர்ச்செய்கையின் கீழான (முளைவிடுதல் உட்பட) மொத்த நிலப்பரப்பு 14 சதவீதத்தினால் 10,005 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. கரும்புப் பயிரின் கீழான பரப்பின் வீழ்ச்சி இங்குரான, செவனகல தொழிற்சாலைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. 1989 இல் இங்குரான, செவனகல தொழிற்சாலைகளின் கரும்புப் பயிர்ச்செய்கையின் கீழான பரப்பு முறையே 12 சதவீதத்தாலும், 53 சதவீதத்தாலும் 2,560 எக்டேயர்களுக்கும், 1,443 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சியடைந்தது. எனினும், கந்தளாய், பெல்வத்தை தொழிற்சாலைகளின் முகாமைத்துவத்தின் கீழான பரப்பு முறையே 17 சதவீதத்தினாலும், 3 சதவீதத்தினாலும் அதிகரித்தது.

1989 இல் அறுவடை செய்யப்பட்ட பரப்பும் 5 சதவீதத்தினால் 8,697 எக்டேயர்களுக்குக் குறைவடைந்தது. கந்தளாய், செவனகல, பெல்வத்தை ஆகிய தொழிற்சாலைகளினால் அறுவடை செய்யப்பட்ட பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989 இல் 10 சதவீதத்தினாலும், 19 சதவீதத்தினாலும், 7 சதவீதத்தினாலும் முறையே 904 எக்டேயர்களுக்கும், 1,440 எக்டேயர்களுக்கும், 3,944 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சியடைந்தது. மாறாக 1989 இல் இங்குரான தொழிற்சாலையினால் அறுவடை செய்யப்பட்ட பரப்பு 16 சதவீதத்தினால் 2,409 எக்டேயர்களுக்கு அதிகரித்தது.

1989 இல் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவும் 11 சதவீதத்தினால் 498,280 மெற்றிக் தொன்களுக்குக் குறைவடைந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் செவனகல, பெல்வத்தை தொழிற்சாலைகளின் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு முறையே 24 சதவீதத்தினாலும், 21 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. மாறாக, இங்குரான, கந்தளாய் தொழிற்சாலைகளினால் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 1989 இல் முறையே 20 சதவீதத்தினாலும், 36 சதவீதத்தினாலும் 132,118 மெற்றிக் தொன்களுக்கும், 38,166 மெற்றிக் தொன்களுக்கும் அதிகரித்தது.

1989 இல் தனிப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களிடமிருந்து எல்லாச் சீனித் தொழிற்சாலைகளினாலும் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் மொத்தத் தொகையும் 187,329 மெற்றிக் தொன்களுக்கு 14 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தினாலும், வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கூட்டு நிலையத்தினாலும் வெளிப் பயிர்ச்செய்கையாளருக்கு நிலங்கள் ஒதுக்கியும் பலவகையான ஊக்குவிப்புக்களை வழங்கியும் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகளை இது பிரதிபலித்தது. கரும்புக்கான உயர்ந்த விலைகள், போக்குவரத்து உதவுதொகைகள், நாற்றுக் கரும்பு, வளமாக்கி, தொழில்நுட்ப அறிவுபோன்ற ஊக்குவிப்புக்களை வழங்கியதன் மூலம் வரையறுக்கப்பட்ட பெல்வத்தைசீனிக் கூட்டு நிலையம் வெளிப்பயிர்ச் செய்கையாளருக்கு உதவியது.

எல்லாத் தொழிற்சாலைகளினதும் சராசரி சீனி பெறும் வீதம் 1988 இன் 7.39 சதவீதத்திலிருந்து 1989 இல் 7.87 சதவீதத்திற்கு அதிகரித்தது. எல்லாத் தொழிற்சாலைகளும் சீனி பெறும் வீதத்தில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த வேளையில் பெல்வத்தைத் தொழிற்சாலை அதிகூடிய 8.2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

முன்னைய ஆண்டைப்போலவே உள்நாட்டுச் சந்தையிலும் இறக்குமதிகளின் மூலமும் சீனிக் கொள்வனவு தனியார் துறையினாலும், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினாலும் தொடர்ந்து கையாளப்பட்டது. இவ்வாண்டில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் 114,750 மெற்றிக் தொன் வெள்ளைச் சீனியை இறக்குமதி செய்ததோடு கிட்டத்தட்ட 2,729 மெற்றிக் தொன் உள்நாட்டு வெள்ளைச் சீனியைக் கொள்வனவு செய்தது.

**சிறு உணவுப் பயிர்கள்**

தரம் குறைந்த தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் விதைகள், வேர்கள், கிழங்கு வகைகள், குறிப்பிட்ட நறுமணப் பொருட்கள் என்பனவற்றைச் சிறு உணவுப் பயிர்கள் உள்ளடக்கியுள்ளன. குறிப்பாக உலர் வலயத்திலும் இடைநிலை வலயங்களிலும் மிகச் சிறிய உடைமைகள், வீட்டுத் தோட்டங்கள், மழை நீரின் உதவியுடனான சேனைகள் என்பவற்றிலேயே இப்பயிர்களில் பெரும் பாலானவை பயிரிடப்படுகின்றன. எனினும் பெறுமதி கூடிய பயிர்களான மிள காய், வெங்காயம், உருளைக்கிழங்கு என்பன நீர்ப்பாய்ச்சல் பிரதேசங்களில் செறிவாகப் பயிரிடப்படுகின்றன. இப்பயிர்கள் பயிரிடப்படும் தன்மையானது பயிர் செய்யப்பட்ட பரப்பு, அவற்றின் உற்பத்தி என்பன தொடர்பான நம்பத் தக்க தரவுகளைச் சேகரிப்பதனைக் கடினமாக்குகின்றது. ஆகவே இப்பயிர்களின் பயிர்ச்செய்கை தொடர்பான பெரும்பாலான தரவுகள் செப்பனற்ற மதிப்பீடு களாகும்.

வேளாண்மை, உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட தற் காலிகதரவுகளின்படி 1989 இல் பெரிய வெங்காயம் தவிர்ந்த ஏனைய எல்லாச் சிறுஉணவுப் பயிர்களும் உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. குறிப்பாக 1988/89 பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பரப்பினைக் கணிசமாகக் குறைவடையச் செய்த வரட்சி நிலைமைகளும், உள்நாட்டுக் குழப்பங்களும் இந்தக் குறைந்த உற்பத்திச் செயலாற்றத்திற்குப் பெருமளவு காரணமாக இருந் திருக்கலாம். 1988/89 பெரும்போகத்தில் எல்லா முக்கிய சிறு உணவுப் பயிர் களினதும் உற்பத்தி கணிசமான வீழ்ச்சிகளைப் பதிவு செய்தது. எனினும் 1989 சிறுபோகத்தில் பயிர் செய்யப்படும் பிரதேசங்களின் வானிலைத் தன்மை களும் பாதுகாப்பு நிலைமைகளும் முன்னேற்றமடைந்தமையின் காரணமாகச் சோளம் (31 சதவீதம்), சின்ன வெங்காயம் (7 சதவீதம்), பயறு (11 சதவீதம்), சோயா அவரை (7 சதவீதம்), உருளைக்கிழங்கு (9 சதவீதம்), பெரிய வெங் காயம் (47 சதவீதம்) என்பன கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. மேலும் வேளாண்மையாளர்களை நெற்பயிரிலிருந்து சிறு உணவுப் பயிர்களுக்கு நகர்த்துவதற்குத் தூண்டிய குறைவான அல்லது பிந்திய மழை 1989 சிறு போகத்தில் இப் பயிர்களின் அதிகரித்த உற்பத்திக்குக் காரணமாக அமைந் திருக்கலாம் போல் தோன்றுகின்றது. 1989 இல் பெரிய வெங்காய உற்பத்தி 45 சதவீத கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. பயிரிடப்பட்ட நிலப் பரப்பு அதிகரித்ததன் காரணமாக உற்பத்தியின் முழு அதிகரிப்பும் சிறுபோகத் திலேயே காணப்பட்டது.

அட்டவணை 1.15

## துணை உணவுப் பயிர்களுக்கான கீழ்மட்ட விலைத்திட்டம்

(கிலோகிராமொன்றிற்கு ரூபா)

| பயிர் | 1989 சனவரி 1 இலிருந்து 1989 திசெம்பர் 31 வரை |
|---|---|
| சோளம் ... ... ... ... | 4.00 |
| குரக்கன் ... ... ... ... | 4.50 |
| நிலக்கடலை ... ... ... ... | 8.00 |
| சோயா அவரை ... ... ... ... | 7.00 |
| எள்ளு ... ... ... ... | |
| கறுப்பு ... ... ... ... | 8.00 |
| வெள்ளை ... ... ... ... | 9.50 |
| மிளகாய் (செத்தல்) ... | — |
| மிளகாய் I ... ... — ... | 28.00 |
| மிளகாய் II ... ... ... ... | 26.00 |
| தட்டைப் பயறு ... ... ... ... | 8.50 |
| பாசிப்பயறு ... ... ... ... | 11.00 |
| உழுந்து ... ... ... ... | 7.00 |

மூலம்: வேளாண்மை, உணவு, கூட்டுறவு அமைச்சு.

பெரிய வெங்காய உற்பத்தியில் அவதானிக்கப்பட்ட கணிசமான அதிகரிப்பைத் தவிர 1989 இல் ஏனைய எல்லா முக்கிய சிறு உணவுப் பயிர்களினதும் உற்பத்தி வெளியீடு கணிசமாக வீழ்ச்சியடைந்தது. பெரும்போகம் சிறுபோகம் இரண்டிலும் பயிர் செய்யப்பட்ட பரப்பு குறைவடைந்தமையும் பெரும்போகத்தில் எக்டேயருக்கான சராசரி விளைச்சல் குறைவடைந்தமையும் காரணமாகச் சோயா அவரையின் உற்பத்தி ஆகக்கூடிய அளவான 71 சதவீத வீழ்ச்சிக்கு வகைகூறியது. மிளகாய் (34 சதவீதம்), நிலக்கடலை (24 சதவீதம்), எள்ளு (66 சதவீதம்), தட்டைப் பயறு (23 சதவீதம்), உழுந்து (53 சதவீதம்) என்பனவற்றின் உற்பத்தியிலும் முக்கியமாகப் பயிர் செய்யப்பட்ட பரப்பு குறைவடைந்ததன் காரணமாக 1989 இல் கணிசமான வீழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன. 1989 இல் சோளம் (48 சதவீதம்), சின்ன வெங்காயம் (11 சதவீதம்), பயறு (22 சதவீதம்), குரக்கன் (54 சதவீதம்) என்பனவற்றின் உற்பத்தியும் கணிசமான வீழ்ச்சிகளைக் காட்டின. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்த உருளைக்கிழங்கு உற்பத்தி 1989 இல் மீண்டும் 2 சதவீத சிறிதளவான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. விதை உருளைக்கிழங்கு இறக்குமதி தனியார் துறையிடம் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் கிடைக்கத்தக்க தன்மையின் அதிகரிப்புக்கு எதிர்மாறாகவே இது காணப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளில் காணப்பட்ட போக்கினைத் தொடர்ந்து சிறு உணவுப் பயிர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1989 இல் 34 சதவீதத்தினால் 35,000 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக உயர்வடைந்தன.

நெல் சந்தைப்படுத்தும் சபையினால் தொழிற்படுத்தப்பட்ட கீழ்மட்ட விலைத் திட்டம் தெரிந்தெடுக்கப்பட்ட எட்டு சிறு உணவுப் பயிர்கள் தொடர்பாக இவ்வாண்டில் தொடர்ந்தும் நடைமுறையிலிருந்தது. நிலக்கடலை, எள்ளு, பயறு, உழுந்து என்பனவற்றின் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் இப்பயிர்கள் தொடர்பான கீழ்மட்ட விலைகள் 1989 இல் மேல்நோக்கித் திருத்தப்பட்டன.

நிலக்கடலை, பயறு, உழுந்து என்பனவற்றிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட விலைகள் ஒவ்வொன்றுக்கும் 1 ரூபாவினால் முறையே கிலோக்கிறாம் ஒன்று ரூ. 8 இற்கும், கிலோக்கிறாம் ஒன்று ரூ. 11 இற்கும், கிலோக்கிறாம் ஒன்று ரூ. 7 இற்கும் அதிகரிக்கப்பட்டன. கறுப்பு எள்ளினதும், வெள்ளை எள்ளினதும் விலைகள் ஒவ்வொன்றும் 50 சதத்தினால் முறையே கிலோக்கிறாம் ஒன்று ரூ. 8 இற்கும், கிலோக்கிறாம் ஒன்று ரூ. 9.50 இற்கும் அதிகரிக்கப்பட்டன. எனினும் 1989 இல் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் 9,964 மெற்றிக் தொன் சோளத்தையும் 226 மெற்றிக் தொன் சோயா அவரையையும் மட்டுமே கொள்வனவு செய்ய இயலுமாக இருந்தது. முன்னைய ஆண்டின் கொள்வனவு களுடன் ஒப்பிடுகையில் சோளத்தினதும் சோயா அவரையினதும் கொள்வனவு கள் 1989 இல் 77 சதவீத, 80 சதவீத கணிசமான வீழ்ச்சிகளைக் காட்டின. 1989 இல் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் உள்நாட்டுச் சந்தையில் கிட்டத்தட்ட 1,369 மெற்றிக் தொன் பெரிய வெங்காயம், 387 மெற்றிக் தொன் பயறு, 47 மெற்றிக் தொன் சின்ன வெங்காயம், 39 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கு, 28 மெற்றிக் தொன் உழுந்து என்பவற்றைக் கொள்வனவு செய்தது. 1989 இல் கிட்டத்தட்ட 6,302 மெற்றிக் தொன் செத்தல் மிளகாயை யும், 44,649 மெற்றிக் தொன் சிவப்புப் பருப்பையும், 23,770 மெற்றிக் தொன் பெரிய வெங்காயத்தையும் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் இறக்குமதி செய்தது.

**மீனும் கால்நடையும்**

1989 இல் மீன் உற்பத்தி 205,286 மெற்றிக் தொன்களெனக் கடற் றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சு தற்காலிகமாக மதிப்பிட்டுள்ளது. இது முன்னைய ஆண்டைவிட 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. பொதுவாக உற்பத்தியில் பெரும் பங்கிற்கு வகைகூறும் (77 சதவீதம்) கரையோர மீன்பிடித் துணைத்துறையின் மீன் உற்பத்தி 1988 இன் 155,099 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 1989 இல் 157,411 மெற்றிக் தொன்களுக்கு 1 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்தது. உள்நாட்டு மீன்பிடித் துணைத்துறையின் மீன் உற்பத்தி யும் 1989 இல் 4 சதவீதத்தினால் 39,720 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. மாறாக, ஒரு நாளைய படகுகளை பலநாளைய படகுகளாக மாற்றல் விரை வடைந்தமையைத் தொடர்ந்து கரைகடந்த மீன்பிடி நடவடிக்கைகள் விரிவடைந் தமையால் கரைகடந்த ஆழ்கடல் மீன்பிடித்துணைத்துறையின் மீன் உற்பத்தி 84 சதவீதத்தினால் கணிசமாக முன்னேற்றமடைந்தது. 1989இல் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிலைமை சிறிது மீட்சியைக் காட்டியபோதிலும் ஆண்டின் பெரும்பாலான காலங்களில் நிலவிய அமைதியின்மையின் காரணமாகப் பலதரப் பட்ட மீன்பிடி நடவடிக்கைகளும் பலதரப்பட்ட மீன்பிடிச் செயற்றிட்டங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. உள்நாட்டுக் குழப்பங்களின்போது மூன்று நன் னீர் மீன்வளர்ப்பு நிலையங்கள் சேதமாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சில மீன்பிடித்தொழில் நிலையங்களுக்குச் சொந்தமான ஊர்திகள் பாது காப்புப் படையினரால் கையேற்கப்பட்டமையைத் தொடர்ந்து ஊர்திகளின் கிடைக்கத்தக்க தன்மை மட்டுப்படுத்தப்பட்டமையால் நீர்நிலைகளில் இருப்பிலிடு வதற்காக மீன் குஞ்சுகளைக் கொண்டு செல்லும் செயல் கடுமையாகப் பாதிக்கப் பட்டது. ஆகவே மீன் குஞ்சு உற்பத்தியும் 1988 இன் 5,402,000 இலிருந்து 1989 இல் 3,886,000 இற்கு வீழ்ச்சியடைந்தது. இருப்பிலிடப்பட்ட மீன் குஞ்சுகளின் தொகையும் 1988 இன் 4,870,000 இற்கு எதிராக 1989 இல் 3,567,000 இற்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. பருவ வாவி நீர் உயிரின

வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 39 பருவ வாவிகளில் 215,000 மீன் குஞ்சுகள் மட்டுமே இருப்பிலிடப்பட்டன. 1988 இல் 148 பருவ வாவிகளில் இருப்பிலிடப் பட்ட பத்து இலட்சம் மீன் குஞ்சுகளுடன் ஒப்பிடுகையில் இது பின்னடைவினைக் காட்டுகின்றது.

கிழக்குக்கரை மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டம், மேற்குக்கரை மீன்பிடி அபிவிருத்திச் செயற்திட்டம், மீன்பிடித் துறைமுகங்களின் பேணல் செயற்றிட்டம், இலங்கை நீர்வாழ் உயிரினவளர்ப்புச் செயற்றிட்டம் போன்ற பல மீன் பிடி அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் 1989 இல் தொடர்ந்தது. இவ்வாண்டில் இலங்கை நீர்வாழ் உயிரியல் வளர்ப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் குருக்காபனை என்ற இடத்தில் இறால் குஞ்சு உற்பத்தி நிலையத்துக்கான கட்டுமான வேலைகள் முன்னேறிக் கொண்டிருந்தன.

அட்டவணை 1.16

மீன் உற்பத்தி 1985—1989

(மெற்றிக் தொன்களில்)

| துணைத்துறை | 1985 | 1986 | 1987 | 1988 | 1989(அ) |
|---|---|---|---|---|---|
| கரையோர ... | 140,266 | 144,266 | 149,278 | 155,099 | 157,411 |
| ஆழ்கடலும் கரைக்கு அப்பாலும் ... | 2,400 | 3,400 | 4,259 | 4,425 | 8,155 |
| உள்நாட்டு ... | 32,743 | 35,390 | 36,465 | 38,012 | 39,720 |
| மொத்தம் ... | 175,409 | 183,056 | 190,002 | 197,536 | 205,286 |

மூலம்: கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவளங்கள் அமைச்சு.

(அ) தற்காலிகமானவை.

புதிய மீன்பிடிக் கலங்களின் வழங்கலினூடாகவும் ஏற்கனவேயுள்ள கலங்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தும் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் 1989 இல் தொடர்ந்தன. எனினும் புதிய படகுகளின் வழங்கலுக்கும் மீன்பிடித்துறையின் மரபுவழிக் கலங்களைப் பொறிமயப்படுத்துவதற்குமான உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1988 இன் ரூ. 290 இலட்சத்திலிருந்து 1989 இல் ரூ. 140 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. பலதரப்பட்ட உதவுதொகைக் கொடுப்பனவுத் திட்டங்களின் கீழ் 40 படகுகள், 434 மரபுவழிக் கலங்கள், 197 மோட்டார்கள் 1 பெரிய படகின் உடற்பாகம் என்பன மீன்பிடித்துறைக்கு வழங்கப்பட்டன.

1989 இல் உள்நாட்டு மீன்பிடித் துணைத்துறைக்கு நீர்த்தொட்டி உதவு தொகைத் திட்டத்தின்கீழ் 137 நீர்த்தொட்டிகளின் கட்டுமானத்திற்காக ரூ. 423,000 கொடுப்பனவு செய்யப்பட்டதோடு படகு உதவுதொகைத் திட்டத்தின் கீழ் 20 படகுகளும் வழங்கப்பட்டன. பலதரப்பட்ட உதவுதொகைக் கொடுப்பனவுத் திட்டங்களின் நடவடிக்கைகளை மாகாண சபைகளுக்குப் பரவலாக்கல் தொடர்பான தீர்மானமொன்று மேற்கொள்ளப்படும்வரை புதிய விண்

ணப்பங்களின் செயல்முறைப்படுத்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால் இவற்றின் கீழான உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1989 இல் குறைப்பினைப் பதிவு செய்தன. இத்தகைய உதவுதொகைக் கொடுப்பனவுகள் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களினூடாக வழிப்படுத்தப்பட வேண்டுமென்ற கொள்கைத் தீர்மானமொன்று இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டமையும் ஆய்வுக்குரிய ஆண்டில் இந்தத் திட்டங்களின் செயலாற்றத்தின்மீது தாக்கத்தினைக் கொண்டிருந்தது.

5 ஆண்டுக் காலத்தை (1990–1994) உள்ளடக்கும் மீன்பிடி அபிவிருத்தித் திட்டமொன்று 1989 இல் தயாரிக்கப்பட்டது. உயர்ந்த உற்பத்தியை எய்துவதே இந்த அபிவிருத்தித் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் மீனவர்களுக்கு அபிவிருத்தி உதவியை வழங்கும் முக்கிய கருவியாகச் செயற்படவுள்ள மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்களாக மீனவர்கள் ஒருமுகப்படுத்தப்படுகின்றனர். தமது உறுப்பினர்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காகப் பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த இயலும் வகையில் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதி மூலவளங்களினாலும் முகாமைத்துவத் திறமைகளினாலும் பலப்படுத்தப்படவுள்ளன. இந்தத் திட்டமானது ஏனைய விடயங்களுக்கிடையில் மீனவர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் இதுவரை புறக்கணிக்கப்பட்டிருந்த நலன்புரி வசதிகளினதும் வருவாய்க் குறை நிரப்பு நடவடிக்கைகளினதும் மேம்படுத்தலை வற்புறுத்துகின்றது. மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் வரவேற்கத்தக்க நடவடிக்கையாக இதனைக் கருதமுடியும்.

குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி 1989 இல் பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) 2,380 இலட்சம் லீட்டர்களாக விளங்கியதோடு முன்னைய ஆண்டைவிட 6 சதவீதம் அதிகரித்திருந்தது. உள்நாட்டுப் பதனிடுவோர், வரையறுக்கப்பட்ட இலங்கை பாற் கைத்தொழில் கூட்டுநிலையம் (மில்கோ), வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்கா என்பனவற்றினால் சேகரிக்கப்பட்ட பாலின் மொத்த அளவு 580 இலட்சம் லீட்டர்களாகும். 1988 இல் 20 இலட்சம் லீட்டர்களினால் வீழ்ச்சியடைந்த வரையறுக்கப்பட்ட மில்கோவினால் சேகரிக்கப்பட்ட பாலின் அளவு 1989 இல் மேலும் 40 இலட்சம் லீட்டர்களினால் 610 இலட்சம் லீட்டர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1989 இல் நிலவிய அமைதியின்மையே பால் சேகரிப்பின் இவ்வீழ்ச்சிக்கு முதன்மைக் காரணியாக விளங்கியது. வேளாண்மையாளருக்குப் போதியளவு வருவாய் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு உடன்பாலின் கொள்வனவு விலை 1989 ஒகத்திலும் நவெம்பரிலும் லீட்டர் ஒன்றுக்கு கிட்டத்தட்ட 50 சதத்தினால் மேல்நோக்கித் திருத்தப்பட்டது. பாற்பண்ணைத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் நிதி உதவிகளையும் ஏனைய உள்ளீடுகளையும் விரிவாக்குவதன் பொருட்டுத் தெரிந்தெடுக்கப்பட்ட சில பிரதேசங்களில் பாற்பண்ணை வேளாண்மையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் முன்னோடி பாற்பண்ணை செயற்றிட்டங்களை ஏற்பாடு செய்யவும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

விலங்கு உற்பத்தி விலங்கு நலத் திணைக்களமும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையும் தமது உதவி நிகழ்ச்சித் திட்டங்களான இனப்பெருக்கப் பொருட்களின் வழங்கல், விரிவாக்கப் பணிகள், தொற்றுநோய்களுக்கெதிரான நோய்த்தடுப்புப் பணிகள் என்பவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டன. கறிக்கான கோழிகளுக்கும், முட்டைக்கான கோழிகளுக்குமான இரு கோழிப் பண்ணைகளை ஆரம்பிக்க தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கு இயலுமாகக்

காணப்பட்டது. மிரிஸ்வத்தைப் பண்ணையின் குஞ்சு உற்பத்தி நிலையம் 1989 இல் தொழிற்பட ஆரம்பித்தது. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை வரண்ட வலய தெங்கு முக்கோணத்தில் 668 எக்டேயர்களில் பசும்புல் மீள்நடுகையையும் மேற்கொண்டது. இலங்கை—சேர்மனி ஆட்டுப்பண்ணை அபிவிருத்திச் செயற்றிட்டம், இலங்கை—ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம், இலங்கை—நெதர்லாந்து கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் போன்ற சிறப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலினூடாக கால்நடைத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் 1989 இலும் தொடர்ந்தன. ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் சில மாவட்டங்களில் கால்நடை அபிவிருத்திக்கான உதவியை விரிவாக்கியது. எனினும் உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகச் சிறப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் கீழான செயலாற்றம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்தத் தவறியதோடு செயற்றிட்டங்களின் நடவடிக்கைகள் நாட்டின் சில பாகங்களிற்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், உள்நாட்டு நிதியங்களினதும் தேவையான அலுவலர்களினதும் குறைபாடும் இந்தச் செயற்றிட்டங்களின் செயலாற்றத்தில் கடுமையான தாக்கத்தினைக் கொண்டிருந்தன.

1989 இன் முட்டை உற்பத்தி 8,340 இலட்சம் எனக் குடிமதிப்புப் புள்ளி விபரவியல் திணைக்களம் தற்காலிகமாக மதிப்பிட்டுள்ளதோடு இது முன்னைய ஆண்டைவிட 7 சதவீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் உள்ளது.

இலங்கை எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் அரசுடைமையாக்கப்பட்ட வர்த்தக முயற்சியான பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனத்திலிருந்தும் பெறப்பட்ட தரவுகளின்படி இவ்விரு முக்கிய அரசதுறைக் கூட்டுத்தாபனங்களினதும் கூட்டான விலங்குத்தீன் உற்பத்தி 1989 இல் 7 சதவீதத்தினால் 52,858 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

பெருந்தொகையான வறிய வேளாண்மையாளர்களின் வருமானத்தின் முக்கிய மூலமாகக் கால்நடை வளர்ப்புக் காணப்படுகின்றது. களப்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் வேளாண்மையாளருக்கு மேலதிக வருவாய் மூலமொன்றாகவும் இது அதேயளவு முக்கியத்துவத்தினைப் பெறுகின்றது. கால்நடைத் துறையில் குறிப்பாகப் பாற்பண்ணைத் துணைத்துறையின் கணிசமான விரிவாக்கத்துக்குப் பெருமளவு வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எனினும், இந்த வாய்ப்புக்களின் கைகூடல் பாற்பண்ணை நடவடிக்கைகளை வர்த்தகப் பண்ணை மயப்படுத்தலிலேயே தங்கியுள்ளது. கிராம மட்டத்திலான வேளாண்மை அமைப்புக்களின் தொடர்ச்சியான அபிவிருத்தியிலும் பால் சேகரிப்பு, பதனிடல், சந்தை அமைப்பு என்பனவற்றைப் பயன்தருவகையில் மேம்படுத்துவதிலும் மட்டுமே உள்நாட்டுப் பாற்பண்ணைத் தொழில் திறமையான முன்னேற்றம் காணும் என்பது வலியுறுத்தப்படவேண்டியுள்ளது.

**வளமாக்கி**

1989 இல் மொத்த வளமாக்கி வழங்கல்கள் 505,878 மெற்றிக் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 4 சதவீத வீழ்ச்சியைக் காட்டின. நெல், சிறு உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஆகிய துறைகள் தவிர்ந்த ஏனைய அனைத்துத் துறைகளுக்குமான வளமாக்கி வழங்கல்கள் 1989 இல் வீழ்ச்சியடைந்தன. அதிகூடிய பங்கான 45 சதவீதத்திற்கு வகைகூறிய நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 227,562 மெற்றிக் தொன்களுக்குச் சிறி

தள்வால் அதிகரித்தன. சிறு உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறைக்கான வழங்கல்கள் முறையே 34 சதவீதத்தினாலும் 19 சதவீதத்தினாலும் கணிசமாக அதிகரித்தன. எனினும் மொத்த வழங்கல்களில் 25 சதவீத சார்புப் பங்கினைக் கொண்டிருந்த தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1989 இல் 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இறப்பர், தெங்கு, குறித்துரைக்கப் படாத பயிர்கள் துறைக்கான வழங்கல்கள் முறையே 14 சதவீதத்தினாலும், 11 சதவீதத்தினாலும்; 15 சதவீதத்தினாலும் கணிசமாக வீழ்ச்சியடைந்தன. பெரும்பாலான பயிர்த்துறைகளுக்கான வளமாக்கி வழங்கல்களின் வீழ்ச்சிக்கு 1989 இன் முதற் காலாண்டில் நிலவிய வரட்சியும் பயிர்ச்செய்கை நடவடிக்கை களிலும் வளமாக்கிப் பகிர்ந்தளிப்பிலும் தடைகளை ஏற்படுத்திய உள்நாட்டுக் குழப்பங்களும் பெருமளவு காரணமாகும்.

அட்டவணை 1.17

**பயிர்களின் படியான வளமாக்கி வழங்கல்கள் 1986–1989**

'000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|
| 1. நெல் ... ... | 232.6 | 217.1 | 226.2 | 227.6 |
| 2. தேயிலை ... ... | 128.8 | 136.7 | 138.0 | 124.6 |
| 3. இறப்பர் ... ... | 26.3 | 23.2 | 25.1 | 21.7 |
| 4. தெங்கு ... ... | 31.6 | 42.2 | 42.0 | 37.5 |
| 5. சிறு உணவுப் பயிர்கள் ... ... | 21.4 | 22.2 | 26.1 | 35.0 |
| 6. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ... ... | 2.4 | 3.2 | 4.7 | 5.6 |
| 7. ஏனையவை ... ... | 54.0 | 60.7 | 63.1 | 53.9 |
| மொத்தம் ... ... | 497.1 | 505.3 | 525.2 | 505.9 |

மூலம்: தேசிய வளமாக்கிச் செயலகம்.

முக்கிய வளமாக்கி கூறுகளினதும் கலவைகளினதும் விற்பனை விலைகள் 1989 இல் மாறாது காணப்பட்டன. இதேவேளையில் 1989 இல் பாறைப் பொசுப்பேற்றின் உற்பத்தி 6 சதவீதத்தினால் 24,458 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது.

வளமாக்கி உதவுதொகைகளுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்குகள் 1989 இல் ரூ. 6,000 இலட்சமாகக் காணப்பட்டன. இத்தொகையில் ரூ. 3,460 இலட்சம் 1988 இன் வளமாக்கி இறக்குமதிகளுக்கான கொடுப்பனவுகளை ஈடு செய்யப் பயன்படுத்தப்பட்டது.

முக்கியமாக மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினாலான வழங்கல்களில் கணிசமான குறைப்புக் காணப்பட்டமையினால் 1989 இல் அரசதுறையினால் வழங்கப்பட்ட வளமாக்கித் தொகை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989இல் 1 சதவீதத்தினால் 420,811 மெற்றிக் தொன்களுக்குச் சிறிதளவு வீழ்ச்சி யடைந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1989இல் தனியார்துறையினாலான வளமாக்கி வழங்கல்கள் 15 சதவீதத்தினால் 85,067 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தன.

1989 இல் இறக்குமதி செய்யப்பட்ட வளமாக்கியின் மொத்தத் தொகை 364,919 மெற்றிக் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 33 சதவீத கணிசமான குறைப்பினைப் பிரதிபலித்தது. நாட்டின் அமைதியின்மை, இருப்புக்களின் உயர்மட்டங்கள், வளமாக்கி உதவுதொகைகளின் கொடுப்பனவு செய்யப்படாமை என்பன இறக்குமதிகளின் வீழ்ச்சிக்குப் பெருமளவு காரணங்களாகின. மொத்த வளமாக்கி இறக்குமதிகளில் இலங்கை வளமாக்கி கூட்டுத்தாபனத்தின் இறக்குமதிகள் 1988 இன் 47 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் கிட்டத்தட்ட 39 சதவீதமாகக் காணப்பட்டது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சல் கூட்டு நிலையம்(வளமாக்கி), வரையறுக்கப்பட்ட ஏ பவர் கூட்டு நிலையம் என்பன முறையே 28 சதவீதத்திற்கும், 16 சதவீதத்திற்கும், 8 சதவீதத்திற்கும் வகை கூறின. 1989 இல் யூரியா இறக்குமதி 32 சதவீதத்தினால் 142,691 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. 1988 இல் இறக்குமதி செய்யப்பட்ட மொத்தத் தொகையில் 82 சதவீதத்திற்கு வகைகூறிய வெளிநாட்டு உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழான வளமாக்கிஇறக்குமதிகள் 1989 இல் 59 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 1.18

**மொத்த விற்பனையாளர்களின் வளமாக்கி வழங்கல்கள் 1988 — 1989**

| துறை | 1988 | | 1989 | | அளவு மாற்றத்தின் வீதம் |
|---|---|---|---|---|---|
| | அளவு (மெற்றிக் தொன்) | % | அளவு (மெற்றிக் தொன்) | % | |
| 1. அரசதுறை ... | 424,798 | 81 | 420,811 | 83 | — 0.9 |
| 1.1 இலங்கை வளமாக்கிக்கூட்டுத்தாபனம் | 217,106 | 41 | 232,574 | 46 | + 7.1 |
| 1.2. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை ... | 125,632 | 24 | 105,325 | 21 | —16.2 |
| 1.3. வரையறுக்கப்பட்ட (வளமாக்கி) கொழும்பு கொம்மர்சியல் கூட்டு நிலையம்* ... | 82,060 | 16 | 82,912 | 16 | + 1.0 |
| 2. தனியார் துறை ... | 100,372 | 19 | 85,067 | 17 | — 15.2 |
| 2.1. வரையறுக்கப்பட்ட ஏ. பவர் அன்ட் கம்பனி ... | 66,476 | 13 | 57,051 | 11 | — 14.2 |
| 2.2. ஏனையவை ... | 33,896 | 06 | 28,016 | 06 | — 17.3 |
| மொத்தம் | 525,170 | 100 | 505,878 | 100 | — 3.7 |

மூலம் : தேசிய வளமாக்கிச் செயலகம்

* இலங்கை அரசினால் அரசுடைமையாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட (வளமாக்கி) கொழும்பு கொம்மர்சியல் கூட்டு நிலையம்.